Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

TUESDAY, JANUARY 3, 2023

செவ்வாய்க்கிழமை ஜனவரி 03, 2023 | ஒளி: 08 கதிர்: 178 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

அலைபேசி பயன்படுத்தி

## வேலை நேரத்தை வீணடிக்க வேண்டாம்

**புதிய சுற்றறிக்கை வருகிறது?**



அலுவலக நேரத்தில் அலைபேசிகளைப் பயன்படுத்தி நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்றும் அரச ஊழியர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன தெரிவித்தார். தொடர்ச்சி P2

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு

# கருவூல பத்திரங்கள் மூலம் நிதி திரட்டல்

**வேட்புமனு தாக்கல் செய்தாலும் தேர்தல் பிற்போகலாம்**




உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் சுமார் 11 பில்லியன் (ரூ.1,100 கோடி) ரூபாய் நிதி கோரப்பட்டுள்ள நிலையில், தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்படாத காரணத்தால், திறைசேரி (கருவூல) பத்திரங்களை வழங்குவதன் மூலம் நிதி திரட்டப்பட வேண்டும் என்று திறைசேரி வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

தேவைப்படும் தொகையான சுமார் 11 பில்லியன் ரூபாயை திறைசேரி பத்திரங்களை கொடுப்பதன் மூலம் வழங்கினாலும் அதற்கு வட்டி செலுத்த வேண்டியிருப்பதால் அரசாங்கத்துக்கு சுமார் 14 பில்லியன் ரூபாய் செலவாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. தொடர்ச்சி P2

## நான்காம் தடுப்பூசியை ஏற்றுங்கள்




நாட்டில் கொவிட் -19 பெருந்தொற்றின் ஆபத்து நிலவுவதாகவும், எனவே நான்காவது கொவிட்-19 தடுப்பூசியாக சினோபார்ம் தடுப்பூசியை கூடிய விரைவில் பெறுமாறு தொற்றுநோயியல் பிரிவு மக்களைக் கேட்டுக்கொண்டது. உலகெங்கிலும் கொவிட்-19 பரவுவதை தொற்றுநோயியல் பிரிவு உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக தலைமை தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சமிதா கினிகே தெரிவித்தார். தொடர்ச்சி P2




தனது அமெரிக்க குடியுரிமையை

## மீண்டும் தருமாறு கோட்டா கோரிக்கை

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கையை விட்டு குடும்பத்தினருடன் வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தற்போது விடுமுறையில் டுபாயில் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தனது அமெரிக்க குடியுரிமைக்கு மீண்டும் விண்ணப்பித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. தொடர்ச்சி P2

## கூட்டமைப்பை பலப்படுத்தவும்

**அடைக்கலநாதன், சித்தார்த்தன் கூட்டாக கோரிக்கை**



கொடூரமான யுத்தத்துக்கு முகம் கொடுத்து 13 வருடங்கள் கடந்த பின்னரும் ஒரு பலவீனமான அரசியல் சூழ்நிலையை எமது இனம் முகம் கொடுத்து நிற்கிறது. மிகப் பலமான கட்டமைப்பாகத் திகழ்ந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, பல்வேறு காரணங்களால் சிதைவடைந்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் நிலையை எட்டியுள்ளதை நாங்கள் கவலையுடன் அவதானிக்கிறோம் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ), இயக்கத்தின் தலைவரும் எம். பியுமான செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன. தொடர்ச்சி P2

## பணவீக்கத்தை குறைக்க முடியும்




நாட்டின் பணவீக்கத்தை குறைப்பதில் சிறந்த முன்னேற்றத்தை காண்பித்துள்ளமை குறித்து திருப்தியடைவதாகவும், பணவீக்கத்தை மேலும் குறைக்க முடியும் என நம்பிக்கை இருப்பதாகவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பௌத்த மகாநாயக்க தேரர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சி P2

இலங்கை போன்ற நாடுகளுக்கான

## அவசர கடன் நிவாரணம் கிடைக்க வேண்டும்




இலங்கை போன்ற நாடுகளுக்கு அவசர கடன் நிவாரணம் கிடைக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துவதாகவும், இது தொடர்பில் பாரிஸ் கிளப் அங்கத்துவ நாடுகளுடனும், இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட பாரிஸ் கிளப் அங்கத்துவமற்ற நாடுகளுடனும் கலந்துரையாடி வருவதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## போதைப்பொருள் கடத்தல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது



போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதாகவும், இதனால் சமூகத்தில் பாரிய மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு அமைச்சு, பொலிஸ் மற்றும் ஏனைய தரப்பினருடன் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கைகள் காரணமாக போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை பெருமளவுக்கு கட்டுப்படுத்த முடிந்துள்ளதாகவும் பாதுகாப்பு செயலாளர் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

சுயாதீன நிறுவனங்களை

## ஒழிக்க நினைப்பது வரலாற்றுப் பிழை



பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மையை இல்லாது ஒழிக்கும் வகையில், அரசியல் அதிகாரம் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இது வரலாற்றுப் பிழை என்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். தொடர்ச்சி P2

## சட்டக் கல்லூரியில் ஆங்கிலம்;

**சவால் செய்த மனு தள்ளுபடி**

இலங்கை சட்டக் கல்லூரியின் அனைத்து கற்கை நெறிகளையும் ஆங்கில மொழிமூலம் நடத்துவதற்கும் பரீட்சைகளை படிப்படியாக ஆங்கில மொழிமூலம் நடத்துவதற்கும் சட்டக் கல்விப் பேரவை எடுத்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை, மேன்முறையீட்டு நீதிமன்றம், திங்கட்கிழமை (03) தள்ளுபடி செய்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா, தம்மிக கணேபொல ஆகிய இருவர் அடங்கிய குழாம் முன்னிலையில் மனு எடுத்துக் கொள்ளப்பட்டது. தொடர்ச்சி P2

## பாடசாலைகளிலேயே அதிக நீர் விரயமாகிறது



அதிகளவு நீர் விரயமாகும் இடமாக பாடசாலை வளாகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அதற்கு அடுத்த இடத்தில் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அரச அலுவலகங்கள் இருப்பதாகவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மேலதிக பொது முகாமையாளர் ஏக்கநாயக்க வீரசிங்க தெரிவித்தார். தொடர்ச்சி P2



## ரணிலை சந்தித்தார் டேவிட் கெமரன்

தனிப்பட்ட விஜயமாக இலங்கை வந்துள்ள பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரன், நேற்று (02) முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார். ஜனாதிபதியுடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்ட கெமரன், ஜனாதிபதிக்கு புத்தாண்டு வாழ்த்துகளையும் தெரிவித்தார். தொடர்ச்சி P2

ஆண்டிறுதிக்குள்

## நாட்டில் சாதாரண சூழலை உருவாக்க எதிர்பார்க்கிறேன்



இலங்கையின் பொருளாதாரத்தின் மிக முக்கிய வருடமான 2023 ஆம் ஆண்டில், தமது பொறுப்புகளை எவரும் தட்டிக்கழிக்கக் கூடாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஆண்டு இறுதிக்குள் இந்த நாட்டில் சாதாரண சூழ்நிலையை உருவாக்கி, அனைவரின் ஆதரவுடன் இந்த நாட்டை முன்னோக்கி வழிநடத்த நான் எதிர்பார்க்கின்றேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

2023 புத்தாண்டில் ஜனாதிபதி அலுவலக ஊழியர்களுடன் இணைந்து நேற்று (02) காலை தமது கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்க முன்னர், தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இதன்பின்னர் அனைத்து ஊழியர்களும் ஒன்றிணைந்து, அரச பணிக்கான சத்தியப் பிரமாணத்தை செய்துகொண்டனர்.

பின்னர் அனைத்து ஊழியர்களுடனும் ஜனாதிபதி, தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கருவூல பத்திரங்கள் மூலம் நிதி திரட்டல்

இதேவேளை, வேட்புமனு தாக்கல் செய்த பின்னரும் அரசாங்கத்தால் தேர்தலை ஒத்திவைக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், நிதிப் பற்றாக்குறையை காரணம் காட்டி தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் அழைப்பு விடுக்கும் என்று எதிர்க்கட்சிகள் அச்சம் தெரிவித்துள்ளன.

இந்த நேரத்தில் தேர்தலை நடத்துவது இயல்புநிலையை மீட்டெடுக்கும் என்றும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் முயற்சிகளை சீர்குலைக்கும் என்றும் ஆளும் கட்சியின் அரசியல்வாதிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், நிதி இல்லை என்று கூறி தேர்தலை தாமதப்படுத்துவது நியாயமற்றது எனவும் தேர்தலை தாமதப்படுத்தினால் அது ஜனநாயகத்துக்கு ஆபத்தாகிவிடும் என்றும் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வேலை நேரங்களை...

பொது நிர்வாக அமைச்சின் புதிய செயலாளராக திங்கட்கிழமையன்று (02) கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், ஊழியர்கள் மத்தியில் உரையாற்றி ய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

ஊழியர்கள் பலர் வேலை நேரத்தில் தொலைபேசியில் நேரத்தை வீணடிப்பதை தான் அவதானித்ததாகவும் காலையில் வேலையை ஆரம்பிக்கும் தொடங்கும் போது அதில் உள்ள பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் செய்திகளைப் பார்க்க வேண்டாம் என்று குறிப்பிட்டார்.

ஊழியர்கள் தங்கள் தனிப்பட்ட அலைபேசியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், நாள் முழுவதும் தொலைபேசியில் செலவிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் கூறினார்.

அதனால்தான் தனியார் நிறுவனங்களில் வேலைக்கு வரும்போது அலைபேசிகளை லொக்கரில் வைத்துவிட்டு போகும் போது எடுத்துச் செல்ல முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.இந்த விவகாரம் தொடர்பாக சுற்றறிக்கை வெளியிடப்பட வேண்டுமா என்பது குறித்து பரிசீலித்து வருகிறோம் என்று தெரிவித்த அவர், தேவைப்பட்டால், அந்த நடவடிக்கையை எடுக்கநேரிடும் என்றும் தெரிவித்தார்.

# கூட்டமைப்பை பலப்படுத்தவும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா ஆகியோருக்கு ஜனவரி 1ஆம் திகதியிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் ரீதியாக செயலாற்றும் தரப்பினருடன் ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்பட்டு ஒரு பலமான அரசியல் சக்தியாக திகழ வேண்டும் என்ற நோக்கோடு கடந்த காலங்களில் நாம் எடுத்து வந்த முயற்சிகள் மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பையும் நம்பிக்கையும் ஊட்டி உள்ளன.

உதாரணமாக ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை பேரவைக்கு நாங்கள் அனுப்பி வைத்த கடிதங்கள், பிராந்திய வல்லரசான இந்தியாவை நோக்கி நாம் எழுதிய கடிதம், அதற்குப் பின்னரும் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்காக ஒருமித்த நிலையில் நாம் செயலாற்றி வந்தமை, ஜனாதிபதித் தேர்தலிலே ஒருமித்த கோரிக்கையை அனைத்து வேட்பாளர்களிடமும் முன்வைத்தமை, அண்மையில் சர்வ கட்சி கூட்டத்திற்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பின் பின்னர் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று கூடி பல விடயங்களை ஆராய்ந்து ஒருமித்த குரலில் அரச தரப்பிடம் கோரிக்கைகளை முன்வைத்தமை எனப் பலவற்றைச் சுட்டிக்காட்ட முடியும்.

இந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியானது மீண்டும் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைத்து தரப்பினரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்வாங்கி அது ஒரு பலமான கட்டமைப்பாக தமிழ் மக்களின் அன்றாட மற்றும் அரசியல் விடயங்களைக் கையாளும் அரசியல் இயக்கமாக மாற்றமடையும் என்ற எதிர்பார்ப்பு எம்மிடமும் தமிழ் மக்களிடமும் மேலோங்கி இருக்கிறது.

இருப்பினும் அண்மையில் வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட முடிவுகளும் அதேபோன்று கிளிநொச்சியில் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள விளம்பரமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய ஒற்றுமையை குழப்புவதான சந்தேகத்தை எமது கட்சிகள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்களின் மாறுபட்ட அறிக்கைகள் மேலும் அவற்றை உறுதி செய்திருக்கின்றன. தேர்தல் நலன்களை மாத்திரம் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்படவில்லை என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

அனைத்து தமிழ்த் தேசியத் தரப்பினரையும் உள்வாங்கி ஒரு பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்குவது தற்போதைய காலத்தின் தேவை என்பதை நாங்கள் நன்கு உணர்கிறோம். அதுவே எம்மக்களது பாரிய எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் என்பதையும் நாங்கள் தெளிவாக அறிந்துள்ளோம்.

இந்தக் கட்டமைப்பு தொடர்ச்சியாக தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை முன்னெடுப்பதற்கும் வலுவான பலமான இயக்கமாக தொடர்வதற்கும், நன்கு ஆய்வு செய்து, நாங்கள் பின்வரும் ஆலோசனைகளை, நாம் ஒன்றிணைந்து, உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையைத் தங்கள் முன் வைக்கிறோம்.

1. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் ரீதியாக செயல்படும் அனைத்து தரப்பினரும் உள்வாங்கப்பட வேண்டும்

2. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலுவாக நிர்வாக மற்றும் ஸ்தாபன ரீதியாக வரையறுக்கப்பட்டு கட்டியமைக்கப்படல் வேண்டும்

3. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்கெனும் பொதுச் சின்னத்துடன் உத்தியோக பூர்வமாகப் பதியப்பட வேண்டும்

மேற்குறிப்பிட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், அங்கத்துவக் கட்சிகளின் தனித்துவம் பேணப் படுவதோடு தனி ஒரு கட்சியின் ஆதிக்கப் போக்குகளும் நெருக்கடிகளும் தவிர்க்கப்பட்டு சுயாதீனமான நிரந்தரமான ஒரு அரசியல் கட்டமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகும். இந்த விடயம் இன்று நேற்று அல்லாமல் நீண்டகாலக் கோரிக்கையாக தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைவராலும் மக்களாலும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இக் கோரிக்கையை எதிர்கால எமது இன நலன் கருதி நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என்பது எங்களுடைய திடமான நம்பிக்கை.

ஆகவே, காலத்தின் அவசியத்தைக் கருதி தேர்தல் நலன்கள் கட்சி நலன்களைத் தாண்டி எமது மேற்கூறிய கோரிக்கைகளை ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்த தங்களுடைய ஆக்கபூர்வமான பதிலை, அதிக காலம் தாழ்த்தாது, ஒரு வார காலத்துக்குள் வழங்குமாறு அன்புடன் கோரி நிற்கிறோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பணவீக்கத்தை குறைக்க முடியும்

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு நெருக்கடி நிலைமையில் உள்ளது, குறிப்பாக பணவீக்கம் கடந்த காலங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது, எனினும் தற்போது அதில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. பணவீக்கத்தை மேலும் குறைக்க முடியும் என நம்பிக்கை இருப்பதாகவும், நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

பணவீக்கத்தை குறைப்பதே மத்திய வங்கியின் கடமையாகும். இந்த விடயத்தில் மத்திய வங்கி சிறந்த முன்னேற்றத்தை காண்பித்துள்ளமை குறித்து திருப்தியடைகின்றேன். இது கடந்த வருடம் நாங்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார சுமைகளை குறைக்கும், வட்டி வீதம் குறையும் மக்களிற்கு நெருக்கடிகள் இன்றி சிறப்பான வாழ்க்கைக்கான வாய்ப்பு கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சட்டக் கல்லூரியில்...

அதன்போது, பரீட்சைக்கு நித்திரை இன்றி தயாராகி சில வினாத்தாள்களுக்கு விடை எழுதி முடித்துள்ள மாணவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் இத்தகைய இடைக்கால உத்தரவை கோருவதற்கு மனுதாரருக்கு வழங்கப்பட்ட சிறப்பு உரிமை என்ன? என்று நீதியரசர்கள் குழாம் கேள்வியெழுப்பியது.

இதன் அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கைகளின் ஆரம்பத்திலேயே மனுவை நிராகரிக்க தீர்மானித்துள்ள தாக அறிவித்து மனு நிராகரிக்கப்பட்டது.

2020ஆம் ஆண்டு டிசெம்பர் 30 ஆம் திகதி சட்டக் கல்விப் பேரவையால் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை, இரத்து செய்யுமாறு, இலங்கை சட்டக் கல்லூரியின் மாணவரான மங்கள புஷ்ப குமார மனுத்தாக்கல் செய்திருந்தார்.

குறித்த வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட விதிகள் உட்பட சட்டக் கல்விப் பேரவையால் பிரகடனப்படுத்தப்பட்ட விதிகளின் அடிப்படையில் மனுதாரர் இலங்கை சட்டக் கல்லூரிக்குள் பிரவேசித்துள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அவதானித்துள்ளது.

அதன்பின்னர், 2021 ஒக்டோபர் மாத்தில் 1ஆம் ஆண்டு பரீட்சை எழுத அவர் விண்ணப்பித்து, பின்னர் அந்த விண்ணப்பத்தை திரும்பப் பெற்றுள்ளார்.

2022 ஏப்ரலில், மீண்டும் முதலாம் ஆண்டு பரீட்சையில் கலந்து கொண்ட அவர், அதில் சித்தியடையவில்லை.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 20ஆம் திகதியன்று மனுவைத் தாக்கல் செய்துள்ள அவர் தற்போது நடைபெற்று வரும் பரீட்சையை நிறுத்தி இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 02ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாகி 4 நாட்கள் பரீட்சை நடைபெற்றுள்ள நிலையிலேயே, விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட மனுவை தள்ளுபடி செய்துள்ளது.

# நான்காம் தடுப்பூசியை...

சமீப காலங்களில், ஃபைசர் தடுப்பூசி நான்காவது டோஸாக வழங்கப்பட்டது, ஆனால் சுகாதார அமைச்சகம் அதன் காலாவதியான பிறகு தடுப்பூசியை அகற்றியது. அதன்படி நான்காவது டோஸாக சினோபார்ம் தடுப்பூசி போட அதிகாரிகள் முடிவு செய்தனர். மக்கள் எந்தவொரு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திற்கும் (MOH) சென்று சினோபார்ம் தடுப்பூசியை எளிதாகப் பெறலாம்.

நாடு 26 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளது மற்றும் இதுவரை 23,321,962 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும் 2,678,038 சினோபார்ம் தடுப்பூசிகள் நாட்டில் உள்ளன. எனவே, கொவிட் டோஸ்களைப் பெறாத எந்தவொரு நபரும் சினோபார்ம் தடுப்பூசியைப் பெற முடியும் என்று வைத்தியர் கினிகே மேலும் தெரிவித்திருந்தார்.

# மீண்டும் தருமாறு...

அவர் டுபாய் வழியாக அமெரிக்கா சென்றதாக முதலில் தெரிவிக்கப்பட்டது, ஆனால் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அமெரிக்கா செல்வதற்கான விசா இன்னமும் கிடைக்கவில்லை எனவும், எனவே தனது அமெரிக்க குடியுரிமையை மீள வழங்குமாறு அமெரிக்க வெளியுறவுத்துறையிடம் தனது வழக்கறிஞர்கள் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், 2019 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அவர் கைவிட்ட அவரது அமெரிக்க குடியுரிமையை மீட்டெடுப்பதற்கான கோரிக்கை இன்னும் அமெரிக்க அதிகாரிகளால் பரிசீலிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டத்தின் போது இலங்கையில் இருந்து தப்பிச் சென்ற நிலையில், தனது அமெரிக்க குடியுரிமையை மீட்டெடுக்குமாறு கோட்டாபய வேண்டுகோள் விடுத்திருந்தார். எனினும் அமெரிக்க குடியுரிமைக்கான முன்னாள் ஜனாதிபதியின் முயற்சிகள் இன்னும் வெற்றிபெறவில்லை என்பதை அமெரிக்க தூதரகத்தின் ஆதாரம் உறுதிப்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவசர கடன் நிவாரணம்...

சாட், எத்தியோப்பியா, ஜாம்பியா, கானா, லெபனான், சுரினாம் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் மக்கள் கடன் பிரச்சனைக்கு தீர்வு காண அழுத்தம் கொடுப்பதாகவும், சீனா, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பொருளாதார மந்தநிலை காரணமாக கடந்த ஆண்டை விட புதிய ஆண்டு மிகவும் கடினமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

உலகப் பொருளாதாரத்தில் இருந்து அமெரிக்கப் பொருளாதாரம் பிரிந்துள்ளதால் பொருளாதார மந்தநிலையைத் தவிர்க்க அமெரிக்காவுக்கு வாய்ப்பு கிடைத்தாலும், அமெரிக்கப் பொருளாதாரம் பிரிந்ததால் உலகப் பொருளாதாரம் மந்தமடையும் என கிறிஸ்டலினா ஜார்ஜீவா தெரிவித்துள்ளார். நடந்து கொண்டிருக்கும் உக்ரைன்-ரஷ்யா போர், அதிக பணவீக்கம் மற்றும் மத்திய வங்கிகளின் அதிக வட்டி விகிதங்கள் ஆகியவை பொருளாதார நடவடிக்கைகளை மெதுவாக்கியுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

# போதைப்பொருள் கடத்தல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

சமூக அமைதியின்மையின் போது பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகள் விநியோகம் போன்றவற்றை உறுதி செய்வதற்காக ஆயுத படையினரும் பொலிஸாரும் வழங்கிய ஒத்துழைப்பிற்காக கமால் குணரட்ண தனது நன்றியை தெரிவித்துள்ளார். நாடு அரசியல் ரீதியில் ஸ்திரமற்றதாக குழப்பம் மிக்கதாக மாறுவதை தடுப்பதற்கு அவசியமான ஆதரவை அவர்கள் வழங்கினார்கள் எனவும் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.

# ரணிலை சந்தித்தார்...

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# ஒழிக்க நினைப்பது வரலாற்றுப் பிழை

திங்கட்கிழமை (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

நாட்டுக்கு மேலும் சுயாதீன நிறுவனங்கள் தேவைப்படுகின்ற நிலையில், தற்போதுள்ள சுயாதீன நிறுவனங்களில் செல்வாக்கு செலுத்துவது நல்ல நிலைமையல்ல எனவும் சுட்டிக்காட்டினார்.

மின் கட்டணத்தை உயர்த்தும் முறை குறித்து சட்டமா அதிபரிடம் தவறான விளக்கம் பெறப்பட்டதாகத் தெரிவித்த அவர், அதற்கேற்ப மின் கட்டணத்தை உயர்த்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். சட்டத்தை தவறாகப் புரிந்து கொண்டு 'பொதுக் கொள்கை திட்டங்களின்' கீழ் யோசனையை முன்வைக்க அமைச்சரவை தயாராகி வருவதாகவும் முன்னர் அவர் குறிப்பிட்டிருந்தார்.அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை மிகவும் அநீதியானது எனவும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதற்கு எதிரானது எனவும் தெரிவித்தார்.

கட்டணத்தை அதிகரிக்கும் முறைமை சட்டத்தில் தனித்தனியாகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை மின்சார சபையிடமிருந்து கிடைக்கப் பெற்றால் மாத்திரமே நடவடிக்கை எடுக்க முடியும் என்றார்.

# நாட்டில் சாதாரண சூழலை...

தேநீர் விருந்துபசாரத்தில் இணைந்து கொண்டார். ஜனாதிபதி பணிக்குழாமின் ஊழியர்களுக்கு, ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார். புத்தாண்டில் பணிகளை ஆரம்பிக்க முன்னர் உரையாற்றிய ஜனாதிபதி, "அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்! ஐந்தரை மாதங்களுக்கு முன்னர் இந்த அலுவலகத்தில் ஒரு வரலாற்றுப் பணியை நாங்கள் ஆரம்பித்தோம். அரசாங்கம் வீழ்ச்சியடைந்து, பொருளாதாரம் உடைந்து வீழ்ந்திருந்த சந்தர்ப்பத்தில், நாட்டை வழமைக்குக் கொண்டுவர இந்த ஐந்தரை மாதங்களில் நடவடிக்கை எடுத்தோம். நமது பொருளாதார பிரச்சினைகள் அனைத்தும் முழுமையாக தீர்க்கப்படவில்லை. ஆனால் இன்று தேவைக்கேற்ப எரிபொருள், எரிவாயு, உணவுப் பொருட்கள், உரங்கள் ஆகியவற்றை வழங்கும் திறனைப் பெற்றுள்ளோம்.

இந்த ஐந்தரை மாதங்களில் இதற்காக நீங்கள் அனைவரும் வழங்கிய ஆதரவுக்கு எனது நன்றிகள். எங்கள் திட்டம் இத்துடன் முடிந்துவிடவில்லை. 2023ஆம் ஆண்டு மிக முக்கியமானது. நாட்டின் கடன் மறுசீரமைப்பு திட்டத்தை செயல்படுத்தி, நாட்டை கடன் சுமையிலிருந்து விடுவித்து நாம் முன்னேற வேண்டும். நவீன உலகத்துடன் போட்டியிடக்கூடிய பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். நாட்டின் அரசியல் முறைமையில் மாற்றம் தேவை என்று பெரும்பாலானோர் கருதுகின்றனர். இந்த இரண்டு விடயங்களையும் நாம் நிறைவேற்ற வேண்டும்.

தற்போதுள்ள அரசியல் முறைமையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான புதிய வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். இதற்காக கடந்த ஆண்டைவிட நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். இந்த அரசாங்கத்தை ஒரே இயந்திரமாகவே பார்க்கிறோம். அமைச்சுக்களுக்கு பல திட்டங்கள் தனியாக பிரிக்கப்படவில்லை. வேலைத் திட்டங்கள் அனைத்தும் ஒரு இயந்திரத்தின் துணைப் பகுதிகளாக முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, யாருக்கும் இடையில் போட்டியோ, கயிறிழுத்தலோ இருக்கக் கூடாது.

தங்களின் பொறுப்புக்களை வரையறுத்துக் கொள்ளக் கூடாது. நாட்டின் அடிப்படைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த நீங்கள் அனைவரும் கட்டுப்பட வேண்டும். இந்தப் பணிகளின் போது ஜனாதிபதி அலுவலகம் மையப் பகுதியாக இருக்கும். அமைச்சரவை மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றினால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும். உங்களின் பணிகள் வாரத்தில் 05 நாட்களுக்கோ, நாளொன்றுக்கு 08 மணித்தியாலங்களுக்கோ மட்டுப்படுத்தப்படக் கூடாது. அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த நாட்டில் சாதாரண சூழ்நிலையை உருவாக்கி, உங்கள் அனைவரின் ஆதரவுடன் இந்த நாட்டை முன்னோக்கி வழிநடத்த நான் எதிர்பார்க்கின்றேன்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

# பாடசாலைகளிலேயே திக...

பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு இலவசமாக நீர் விநியோகம் செய்யப்படுவதனால் நீர் விரயம் அதிகரித்து காணப்படுவதாகவும் குறிப்பிட்ட இடங்களில் உள்ள குடிநீர் குழாய்களில் இருந்து அதிகளவில் நீர் விரயமாவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீர் விரயம் காரணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வழிபாட்டுத் தலங்களுக்கான நீர் விநியோகத்துக்காக குறிப்பிட்ட தொகையை அறவிடுவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

மேலும், குடிநீர் குழாய் உடைப்பு, நீர்க் கசிவு போன்ற காரணங்களால் கணிசமான அளவு குடிநீர் வீணாகுவதாகவும் தெரியவருகிறது.

# சவாலான சூழலில் உள்ளோம்



முன்னெப்பொழுதும் இல்லாத அளவு சவால்களுக்கு நாடு முகங்கொடுத்திருக்கும் நிலையில் நாட்டிலுள்ள உயரிய நிறுவனத்தின் பணியாள் தொகுதியினர் என்ற ரீதியில், மக்களின் எதிர்பார்ப்புகளை பொறுப்புடன் நிறைவேற்ற, புதிய வருடத்தில் அனைவரும் அணிவகுக்க வேண்டும் என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று (02) பாராளுமன்ற பணியாள் தொகுதியினர் முன்னிலையில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான அரச ஊழியர்கள் சத்தியப்பிரமாணம்/ உறுதியுரை எடுத்துக்கொள்ளும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொவிட்-19 சவால்களை வெற்றிகொண்ட பின்னர், பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் நிலை ஏற்பட்டதாகவும், தற்பொழுது காணப்படும் பின்னடைவுகளை வெற்றிகொள்ள அரச பணியாளர்களுக்கு விசேட பொறுப்புகள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக பெருந்தொகையான அரசாங்க ஊழியர்கள் ஒரே நேரத்தில் ஓய்வுபெறும் பின்னணியில், முன்னெப்போதையும் விட சவாலான சூழலில் மக்களுக்கான தமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டியுள்ளதாகவும் பிரதி சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில், பாராளுமன்றத்தின் உதவி செயலாளர் நாயகம் டிகிரி. கே ஜயதிலக, திணைக்களங்களின் பிரதானிகள், பாராளுமன்ற பணியாள் தொகுதியினர், இணைந்த சேவைகளின் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.



### அனைவரும் ஒரே தேசத்தின் பங்காளிகளாக,

## வெற்றிமிக்க எதிர்காலத்தின் வாரிசுகளாக செயற்படுவோம்

வரலாற்றில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பின்னடைவுகளையும் மீள் எழுச்சியையும் அனுபவித்த ஒரு நாடு என்ற வகையில், மீண்டும் கீர்த்திமிக்கதொரு நாடாக கட்டியெழுப்ப முடியும். வரலாற்றில் மிகவும் சவாலான காலகட்டத்திற்கு நாம் முகம்கொடுத்துள்ளோம் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தின் ஊழியர்கள் 2023 புத்தாண்டில் கடமைப் பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்று (02) பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர்,

தேசத்தின் எதிர்காலத்தை வெற்றிகரமானதாக ஆக்குவதற்கான உறுதிமொழியை வழங்கி, அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு உறுதிபூணும் தருணம் இது. சுதந்திரம் அடைந்து நூறு ஆண்டுகள் என்ற இலக்கை எட்டுவதற்கான அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கம் முழு நாட்டு மக்களுடனும் ஒன்றிணைந்துள்ளது.

இன்று இந்த உறுதிமொழியை வழங்கும் போது, நாட்டின் ஜனாதிபதி அலுவலகம், அமைச்சுகள், திணைக்களங்கள் என நாடு முழுவதும் பரந்துள்ள அரச சேவை நிறுவனங்கள், எங்களுடன் இணைந்துள்ள இலட்சக்கணக்கான அரச ஊழியர்கள், ஆயிரக்கணக்கான தனியார் துறை ஊழியர்கள என அனைவரினதும் ஒரே எதிர்பார்ப்பு, நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதாகும்.

இதன்போது அரச சேவைக்கு மிகவும் முக்கியமான பணி ஒதுக்கப்பட்டுள்ளது. மக்களுக்கும் முழு நாட்டுக்கும் அரச சேவையை செயற்றிறனாகவும் ஒழுங்குமுறையாகவும் பயனுறுதிமிக்கதாகவும் கொண்டுசெல்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பின்னடைவுகளையும் மீள் எழுச்சியையும் அனுபவித்த ஒரு நாடு என்ற வகையில் மீண்டும் கீர்த்திமிக்கதொரு நாடாக கட்டியெழுப்ப முடியும். வரலாற்றில் மிகவும் சவாலான காலகட்டத்திற்கு நாம் முகம்கொடுத்துள்ளோம். வளர்ச்சியடைந்த, உணவில் தன்னிறைவு பெற்ற நாடாக மாறவும், பல்வேறு துறைகளில் புதிய அபிவிருத்திகளில் ஈடுபடும் புதிய தலைமுறையை கட்டியெழுப்பவும், எமது கரங்களை நீட்டி, அரச துறையின் அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றுமாறு பிரதமர் என்ற முறையில் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அனைவரும் ஒரே நாடாக, ஒரே தேசத்தின் பங்காளிகளாக ஒரே அபிவிருத்தி செயன்முறையின் வெற்றிமிக்க எதிர்காலத்தின் வாரிசுகளாக எமது பணிகளை மேற்கொள்வோம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## இந்த ஆண்டில் அரிசி இறக்குமதி இருக்காது

2022ஆம் ஆண்டில் அசாதாரண காலநிலை மற்றும் ஏனைய காரணிகளால் 2022ஆம் ஆண்டு அரிசி இறக்குமதிக்காக 400 மில்லியன் டொலர் செலவிடப்பட்டதாகவும், ஆனால் இந்த ஆண்டில் அவ்வாறானதொரு நிலை ஏற்படாது எனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இந்த 2023ஆம் ஆண்டு ஓர் அரிசி மணியைக் கூட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அவசியம் இருக்காது என நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் 100 சதவீதமான நெற்செய்கை இந்தப் பருவத்தில் பயிரிடப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் எனவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.



விவசாய அமைச்சால் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இப் பருவத்தில் நெற்செய்கை 08 இலட்சம் ஹெக்டேயர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. இன்னும் பயிரிடப்பட்டு வரும் நெற்செய்கையின் அளவு 760,000 ஹெக்டேரைத் தாண்டியுள்ளது. ஆகவே இந்த ஆண்டில் சிறுபோக மற்றும் பெரும்போகத்தில் எதிர்பார்த்த அளவு பலன் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### 12 மீனவர்களும்

## ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனையுடன் விடுவிப்பு

**செந்தூரன் பிரதீபன்**

டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி பருத்துத்துறை கடல் பகுதியை அன்மித்த கடற்பரப்பில் சட்ட விரோதமாக நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரும் நேற்றைய தினம் (02) பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 12 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட மூன்று வருட சிறைத்தண்டனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் பொன்னுத்துரை கிரிசாந்தன் மீனவர்களை விடுவித்து உத்தரவிட்டார். காரைக்கால் பகுதியை சேர்ந்த குறித்த மீனவர்கள், 22 ஆம் திகதி ஒரு விசைப்படவுடன் இலங்கை கடற்பரப்புக்குள்ள நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த பொழுது, காங்கேசன் துறை கடற் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

### வரலாற்றில் மிக குறைந்தளவில்

## கலண்டர்கள், டயரிகள் அச்சிடப்பட்ட ஆண்டு

**ரஞ்சித் ராஜபக்ஷ**

சமீபகால வரலாற்றில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான கலண்டர்கள், டைரிகள் அச்சிடப்பட்ட ஆண்டாக 2023 ஆம் ஆண்டு இருக்கும் என்று அச்சுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஏனைய ஆண்டுகளில், கலண்டர்கள், டயரிகள் அச்சிடுவதற்கு அதிக ஓர்டர்கள் கிடைத்த நிலையில், தற்போது நாட்டில் காகிதத் தட்டுப்பாடு மற்றும் அச்சிடப் பயன்படுத்தப்படும் மைகளின் விலை அதிகரிப்பு என்பவற்றால் கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் கலண்டர்களை அச்சிடும் செலவு 5 மடங்காக அதிகரித்துள்ளதால் கலண்டர், டயரிகளை அச்சிடுவதற்கான ஓர்டர்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

ஏனைய வருடங்களில் நாட்டின் பெரிய வணிக நிறுவனங்கள் மற்றும் வர்த்தகர்கள் கலண்டர்களை 12 பக்கங்களில் அச்சிட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய நிலையில், இந்த ஆண்டு சில நிறுவனங்கள் கலண்டர்களை ஆறு பக்கங்களாக மட்டுப்படுத்தி அச்சிட்டுள்ளன.

அரச மற்றும் தனியார் வங்கிகள் ஒவ்வோர் ஆண்டும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு இலவச கலண்டர்களை வழங்கிய நிலையில், சில வங்கிகள் 2023 ஆம் ஆண்டிற்கான கலண்டரைத் தயாரித்து சமூக ஊடக வலையமைப்புகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதேபோல் அச்சிடப்பட்டு சில நிறுவனங்களால் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள கலண்டர்கள், ஏனைய ஆண்டுகளைப் போல கவர்ச்சிகரமான முறையில் அச்சிடப்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.









## புத்தாண்டில் கடமைகளை ஆரம்பித்த ஜனாதிபதி

2023 புத்தாண்டில் ஜனாதிபதி அலுவலக ஊழியர்களுடன் இணைந்து நேற்று (02) காலை தமது கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி, புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்க முன்னர், தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இதன்பின்னர் அனைத்து ஊழியர்களும் ஒன்றிணைந்து, அரச பணிக்கான சத்தியப் பிரமாணத்தை செய்துகொண்டனர். பின்னர் அனைத்து ஊழியர்களுடனும் ஜனாதிபதி, தேநீர் விருந்துபசாரத்தில் இணைந்து கொண்டார். ஜனாதிபதி பணிக்குழாமின் ஊழியர்களுக்கு, ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்துகளையும் தெரிவித்தார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

### அரச பாடசாலைகளில்

## புதிய வருடத்தில் புதிய திட்டம்

### பிரதி புதன்கிழமைகளில் 10 நிமிடங்கள் மாணவர் விழிப்புணர்வு செயற்றிட்டம்

**வி.ரி.சகாதேவராஜா**

இலங்கையில் உள்ள சகல அரச பாடசாலைகளிலும் புது வருடத்தில் இருந்து பிரதி புதன்கிழமைகளில் காலை 10 நிமிடங்கள் மாணவர் விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இது தொடர்பான சுற்றுநிருபத்தை கல்வி அமைச்சு சகல மாகாண வலய கல்வி பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

முதல் 12 புதன்கிழமைகளில் காலை 7.30 மணிமுதல் 7.40 மணி வரை இப் புதிய விழிப்புணர்வு செயற்றிட்டம் அமலாக்கப்படவுள்ளது. அதன்படி, புதன்கிழமை முதலாவது நாள் திட்டம் அறிமுகமாகவுள்ளது. ஆக பத்து நிமிடங்களைக் கொண்டதாக, ‘நிலையான தன்மையில் அமர்த்தல்’ என்ற தொனிப்பொருளில் இந்த வேலைத்திட்டம் 12 புதன்கிழமைகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மாணவர்களின் விழுமியங்கள் மற்றும் பண்புசார் விருத்தி தொடர்பாக இப் புதிய விழிப்புணர்வு செயற்றிட்டம் அமல்படுத்தப்பட இருக்கின்றது. நிலையான தன்மையில் அமரச் செய்தல் என்ற இந் நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. இதனை சர்வ மத குழுக்கள் கண்காணிக்க இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.


### புதிய ஆண்டில்

## திடமாக முன்னேறுவோம்

‘பழையன கழிதலும் புதியன புகுதலும்’ என்பதற்கு அமைய மக்களை வலுப்படுத்தும் வகையிலான மாற்றங்களை உள்வாங்கி, திடமாக நாட்டை முன்னேற்றுவதற்கு அனைவரும் திடசங்கற்பம் பூணவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

2023 ஆண்டில் கடற்றொழில் அமைச்சின் செயற்பாடுகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு, மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று (02) நடைபெற்றது.

இதன்போது, தேசிய கொடியை ஏற்றி வைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புதிய வருடத்திற்கான உறுதிமொழியைத் தொடர்ந்து, உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஸாந்த, அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்கா, கடற்றொழில் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் கே. தயானந்தா மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், கடற்றொழில் அமைச்சரின் செயலாளர்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சின் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## 142 பொருட்களுக்கு HS குறியீடு

எதிர்வரும் காலங்களில் சில பொருட்களுக்கு சுங்க குறியீடு எனப்படும் HS குறியீடு புதிதாக அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும், அதற்கமைய 142 புதிய வகை பொருட்களுக்கு இவ்வாறு சுங்க குறியீடு அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். இறக்குமதி - ஏற்றுமதியை எளிதாக்கும் மற்றும் ஒழுங்குபடுத்தும் நோக்கில் இந்தக் குறியீடு கொண்டு வரப்படவுள்ளது. அத்துடன் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் சில தினங்களில் வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஆரம்ப சுகாதார கட்டமைப்புகளின் அபிவிருத்திக்காக

# வந்த நிதி போனது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்யும் (PSSP) நிதியொதுக்கீட்டின் கீழ், 2023ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 210 மில்லியன் ரூபாய் நிதியில் 110 மில்லியன் ரூபாய் வேறுமாவட்டத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில், ஆரம்ப சுகாதார கட்டமைப்புகளின் அபிவிருத்திக்காக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட 210 மில்லியன் ரூபாய் நிதியில், திடீரென 110 மில்லியன் ரூபாயை மாகாண சுகாதார அமைச்சால், வேறு மாவட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு உள்ளதாகவும் அதுதொடர்பில், கடந்த டிசெம்பர் மாதம் 30ஆம் திகதி கடிதம் ஒன்றும், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின், மாவட்ட மருந்து களஞ்சியத்துக்கான கட்டுமான பணிகள் நிறைவுபெறாத நிலையில் காணப்படுவதுடன் முழங்காவில் வைத்தியசாலையில் வைத்தியர்களுக்கான விடுதி அமைக்கப்படாமலும் காணப்படுகின்றன. இவற்றைவிட, வன்னேரிக்குளம் மற்றும் கண்டாவளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆரம்ப வைத்திய பராமரிப்பு நிலையங்களின் கட்டடங்கள் சேதமடைந்து, இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு கிராமிய வைத்தியசாலைகளின் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளபோதும், குறித்த நிதி மீளத்திருப்பிப் பெறப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

வன்னேரிக்குளம் – பாலாவி வரையான வீதியை புனரமைக்க வேண்டும்

## பத்தாண்டுகளுக்கும் மேலாக ஏமாற்றப்படும் மக்கள்

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் தொடக்கம் பாலாவி வரையான வீதியைத் தொடர்ந்து புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வன்னேரிக்குளத்தில் இருந்து பாலாவி வரையான வீதி புனரமைப்புகள் தொடங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இவ்வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

இடைநிறுத்தப்பட்ட வீதி வேலையை முன்னெடுக்குமாறு, பல்லவராயன்கட்டு சந்தியில் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய நிலையில், 2022 ஏப்ரல் மாதத்தில், வீதி வேலைகள் தொடங்கப்படும் என அதிகாரிகளால் வாக்குறுதி வழங்கப்பட்டது.

வன்னேரிக்குளத்தில் இருந்து பாலாவி வரையான 27 கிலோ மீற்றர் தூரம்கொண்ட வீதி புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. 2,000 குடும்பங்கள் வாழ்கின்ற ஜெயபுரம், வன்னேரிக்குளம், பல்லவராயன்கட்டு, வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்களில் ஜெயபுரம் மகா வித்தியாலயம், வேரவில் மகா வித்தியாலயம், கிராஞ்சி, வலைப்பாடு பாடசாலைகள் என நான்கு பாடசாலைகள் இயங்குகின்றன.

வேரவில் பிரதேச வைத்தியசாலையின் அம்புலன்ஸ், முழங்காவில் ஆதார வைத்தியசாலை, கிளிநொச்சி பொது வைத்தியசாலை என்பவற்றுக்கு, வீதி புனரமைக்கப்படாத காரணத்தால், அவசரமாகச் செல்ல முடியாது உள்ளது.

இந்நிலையில், கிளிநொச்சி மேற்குக்கான போக்குவரத்து, வன்னேரிக்குளத்தில் இருந்து பாலாவி வரை சீர்குலைந்து உள்ளது. குன்றும்குழியுமான வீதியால், பூநகரி கடலுணவுகளை கிளிநொச்சி சந்தைக்கு கொண்டு செல்வதிலும் நெருக்கடிகள் காணப்படுகின்றன.

இந்நிலையில், குறித்த வீதியைப் புனரமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகம், பூநகரி பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கியமான வீதி ஒன்று புனரமைக்கப்படாமல், பல கிராமங்களின் மக்கள் பத்தாண்டுகளுக்கு மேலாக ஏமாற்றப்படுகின்றார்கள் எனவும் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

வவுனியா நகர மத்தியில்

## பத்மநாபாவுக்கும் உமாமகேஸ்வரனுக்கும் சிலை

■ க. அகரன்

வவுனியா நகர மத்தியில், தந்தை செல்வாவின் சிலைக்கு அருகாமையில், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் பத்மநாபா மற்றும் புளொட் அமைப்பின் தலைவர் உமாமகேஸ்வரன் ஆகிய இருவருக்கும் சிலை வைப்பதற்கான கட்டுமான பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கான அனுமதி, வட மாகாண ஆளுநரிடம் பெறப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.



கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு சமூகம் அளிக்குமாறு

## சிவாஜிலிங்கத்துக்கு நீதிமன்ற கட்டளை

■ நிதர்சன் வினோத்



தீலிபனின் நினைவுதினத்தை அனுஷ்டித்தமை தொடர்பாக, பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கத்தை, கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு, 11ஆம் திகதி சமூகம் அளிக்குமாறு நீதிமன்ற கட்டளை வழங்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை (31) எம்.கே சிவாஜிலிங்கத்தின் வீட்டுக்குச் சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார், நீதிமன்ற கட்டளையை வழங்கியுள்ளனர்.

நீதிமன்ற தடையை மீறி, தீலிபனின் நினைவுதினத்தை அனுஷ்டித்த குற்றச்சாட்டின் கீழ், கோண்டாவில், அன்னங்கை ஒழுங்கையில் வைத்து 2020 செப்டெம்பர் 15ஆம் திகதி எம்.கே சிவாஜிலிங்கம் கைதுசெய்யப்பட்டார்.

நீதிமன்ற தடையுத்தரவை மீறியமை, தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் உறுப்பினரை நினைவுகூர்ந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ், யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட எம்.கே சிவாஜிலிங்கத்தை நீதிமன்று எச்சரித்து, இரண்டு இலட்ச ரூபாய் சரீரப் பிணையில் விடுவித்திருந்தது.

இது தொடர்பாக, எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவிக்கும்போது கூறியதாவது; தியாகி தீலிபனின் நினைவுதினத்தை அனுஷ்டித்தமை தொடர்பாகக் கைது செய்து, 24 மணி நேரம் தடுத்துவைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, பயங்கரவாத தடைச்சட்டத்தை வழக்கில் புகுத்தக்கூடிய வகையிலே, பொலிஸார் முயன்றதை நான் அறிந்தேன். பின்னர் சாதாரண சட்டத்தின் கீழ் முன்னிலைப்படுத்தப்பட்டேன்.

பயங்கரவாத சட்டத்தின் கீழ் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்ய யோசித்து இருக்கின்றோம். சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இதன் கோவை அனுப்பப்பட்டு இருக்கின்றது என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்திருந்தனர். அந்த அடிப்படையில், கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிமன்ற கட்டளையை பொலிஸார் வழங்கிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செயலுக்காக, யாழ்ப்பாணத்தில் மேல்நீதிமன்றம் இருக்கத்தக்கதாக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நோக்கம் என்ன? பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்தார்களா அல்லது பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒத்ததாக புலிகளின் மீளுருவாக்கம் போன்ற குற்றச்சாட்டுகளை சுமத்தப்பட்டிருக்கிறதா என்பது குற்றப்பத்திரிகை வழங்கிய பின்னரே தெரியும். பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என கூறப்படும் போது, இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

முற்பணக் கொடுப்பனவு 4,000 ரூபாயில்

# என்னதான் செய்ய முடியும்?

## கிழக்கு கல்வி நிர்வாக அதிகாரிகள் சங்கம் கேள்வி

■ எம்.எம் அஸ்லம்

புதுவருட விசேட முற்பணமாக, அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள 4,000 ரூபாயைக் கொண்டு என்னதான் செய்ய முடியும் என்று இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

ஆகையால், அரசாங்க ஊழியர்களுக்கான புதுவருட விசேட முற்பண தொகையை, தற்போதைய பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு 10,000 ரூபாயாக அதிகரிக்குமாறு அச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி நிதியமைச்சு, பொது நிர்வாக அமைச்சு என்பவற்றின் செயலாளர்களுக்கு அவசர மகஜர்களை அனுப்பி வைத்திருப்பதாக அதன் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார் நேற்று (02) தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; அரச ஊழியர்களுக்கு புது வருட விசேட முற்பணம் வழங்கப்படுவதன் பிரதான நோக்கம், புது வருடத்தில் அரச ஊழியர்களது பிள்ளைகளுக்குரிய பாடசாலை தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதாகும்.

ஆனால், அரசாங்கம் அறிவித்துள்ள 4,000 ரூபாயைக் கொண்டு, தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக எதையும் செய்யமுடியாது. அதிலும் அப்பியாசக் கொப்பிகள் உட்பட பாடசாலை உபகரணங்களின் விலைகள் பன்மடங்காக அதிகரித்துள்ள சூழ்நிலையில், இத்தொகையைக் கொண்டு ஒரு பிள்ளையின் தேவையைக் கூட முழுமையாக நிறைவேற்றிக் கொள்ள முடியாது.

எனவே, இத்தொகையை ஆகக்குறைந்தது 10,000 ரூபாய் வரை அதிகரிப்பதன் மூலமே, தமது பிள்ளைகளின் தேவைகளை அரச சேவை ஊழியர்கள் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்றார்.





## பரிசளிப்பு விழா

களுவாஞ்சிகுடி வரலாற்றுக் குழுவின் பரிசளிப்பு விழா, களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் மண்டபத்தில் சனிக்கிழமை (31) குழுவின் ஏற்பாட்டாளரும், வரலாற்று ஆசிரியருமான த. ஐங்கரனின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மூ. கோபாலரெத்தினம் பிரதம அதிதியாகவும் பட்டிருப்பு வலய கல்வி அலுவலகத்தின் வரலாற்றுப் பாடத்துக்கான உதவி கல்வி பணிப்பாளர் செ. சுரேஸ், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
கடந்த வருடம், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வ. சக்தி

## இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தராக நியமனம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்



மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் சேவையாற்றிய கிருஷ்ணபிள்ளை தயாபரன், சேவைத் திறன் அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் மாவட்ட செயலகத்தில் 30 வருடகாலமாக, 10 அரசாங்க அதிபர்களின் கீழ் பணியாற்றிய அனுபவத்தை கொண்டுள்ளார். தனது சேவைக்காலத்தில் பேராதனை பல்கலைகழகத்தின் இளமாணி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் முதுமாணி, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் அலுவலக முகாமைத்துவ டிப்ளோமா ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார்.

தனது முதலாவது நியமனத்தை 1991.03.18ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில், இலங்கை பொது எழுதுவினைஞராகப் (தரம் ii ஆ) பெற்றிருந்தார். 2002.06.19ஆம் திகதி வரை பொது எழுதுவினைஞராகவும், 23.12.2022 வரையான காலப்பகுதியில் நிர்வாக உத்தியோகத்தர் சுப்ரா தரத்தில் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு குடும்பத்தின் முன்மாதிரி

■ வி.ரி சகாதேவராஜா

காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை பூர்த்திசெய்யும் வகையில், காரைதீவில் உள்ள ஒரு குடும்பம், ஒரு தொகுதி மருந்து பொருட்களை வழங்கியுள்ளது.

காரைதீவு மார்க்கண்டு (முதலாளி) சமூகஅறக்கட்டளை மூலம், புதுவருட தினமான நேற்று முன்தினம் குடும்ப உறுப்பினர்களால், ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

சமூக அறக்கட்டளை பிரதிநிதிகளான திருமதி மார்க்கண்டு, மகன் வித்தியானந்தன் உள்ளிட்டவர்கள், வைத்தியசாலை பொறுப்பதிகாரி டொக்டர் நடராஜா அருந்திரனிடம் மருந்துப் பொருட்களை வழங்கி வைத்தனர்.



மருந்து தட்டுப்பாடு தொடர்பாக, டொக்டர் நடராஜா அருந்திரன், மக்களிடம் உதவும்படி பகிரங்கமாக கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பட்டிருப்பு வலய கல்வி பணிப்பாளராக மகேந்திரகுமார்

■ வி.ரி சகாதேவராஜா



பட்டிருப்பு வலய கல்வி பணிப்பாளராக செபமாலை மகேந்திரகுமார் நேற்று (02) தனது கடமைகளை பொறுப்பேற்றார். ஏற்கெனவே, கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளராக இருந்த திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம், இதே பட்டிருப்பு வலய கல்வி பணிப்பாளராகவும் கடமையாற்றி, நேற்று முன்தினம் ஓய்வு பெற்றதையடுத்து, புதிய பணிப்பாளராக மகேந்திரகுமார் நியமிக்கப்பட்டார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 1 ஐச் சேர்ந்த இவர், இதே வலயத்தில் பிரதி கல்வி பணிப்பாளராக கடமையாற்றி வந்தார். மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி அதிபராகவும் கிழக்கு மாகாண கல்வி திணைக்களம், திருக்கோவில், மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு ஆகிய வலயங்களில் பிரதிக் கல்வி பணிப்பாளராக கடந்த 15 வருடங்களாக பணியாற்றி வந்தார்.

## திருக்கோவிலில் 'நாவலர் வீதி'

■ வி.ரி சகாதேவராஜா

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டின் செயற்றிட்டங்களில் ஒன்றான, நாவலர் வீதி பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓவியர் மு. பத்மவாசன் இவ்வீதி பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் இ.வி கமலராஜன், உபதவிசாளர் பி.விக்னேஸ்வரன், திருக்கோவில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் க. சதிசேகரன், உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி சகாதேவராஜா, ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வண்ணக்கர் வ. ஜெயந்தன், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கே. ஜெயராஜ், திருக்கோவில் பிரதேச செயலக முன்னாள் கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தர் கண. இராஜரெத்தினம், திருஞானவாணி அறநெறி பாடசாலை தலைவர் ஆ. கணேசமூர்த்தி, எழுத்தாளர் சு. கார்த்திகேசு எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில், நாவலர் பெயரில் மூன்றாவது வீதி, திருக்கோவிலில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கவனிப்பாரற்ற நிலையில் மலையகத்தாய்

### பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதாக தவிசாளர் உறுதி

■ நிலமேகம் பிரசாந்த்

பல பிரச்சனைகளுக்கு மத்தியில் கொட்டகலை நகர மத்தியில் வைக்கப்பட்ட மலையக தாய்சிலை தற்போது பறவைகளின் எச்சமிடும் இடமாக மாறிவிட்டதுடன் வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து வீணாவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

பல போராட்டங்களுக்கு மத்தியில் நிலையான ஓரிடத்தில் வைக்கப்பட்ட இச்சிலை, இன்று சீரழிந்து காணப்படுகின்றது. இச்சிலை தொடர்பில் கூறிய வாக்குறுதிகளும் வெறும் வாய் வார்த்தைகளாக மாறிவிட்டதாக பலர் குற்றம் சுமத்துவதோடு, இச்சிலைக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதாக கூறிய இ.தொ.கா பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமானும் கண்டுகொள்ளவில்லை என்றும்



தெரிவிக்கின்றனர்.

2020ஆம் ஆண்டு ஸ்ரீபாத கல்லூரியில் 'முகவரி வர்ணப்பிரவாகம்' எனும் சித்திர கண்காட்சியில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் இச்சிலை வடிவமைக்கப்பட்டது.

எனினும் அச்சிலையை ஸ்ரீபாத கல்லூரி வளாகத்தில் வைக்கப்படுவதற்கு எழுந்த எதிர்ப்பையடுத்து, ஜீவன் தொண்டமானால் கொட்டகலை பிரஜாசக்திக்கு சொந்தமான கட்டடத்தில் வைக்கப்பட்டு உரிய பாதுகாப்பு வழங்கப்படுமெனவும் உறுதியளிக்கப்பட்டது.

எனினும் அச்சிலை இன்று எவரும் கண்டுகொள்ளாத நிலையில் அநாதையாகி காணப்படுகின்றது கூறப்போனால் பறவைகளின் எச்சமிடும் பகுதியாக மாறியுள்ளதால் பார்ப்பதற்கே அவலநிலையாக உள்ளது.

இது தொடர்பில் கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாந்திடம் வினவியபோது, இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தேசித்துள்ளோம். இது தொடர்பில் சபை உறுப்பினர்களிடமும் கலந்தாலோசிக்கப்பட்டது எனவே, விரைவில் அச்சிலையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டார்.



**சாமி தரிசனம்...**

சபரிமலைக்குச் சென்றிருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் சாமி தரிசனத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்த பக்தர்களுக்கு பிரசாதமும் வழங்கிவைத்தார்.

### தற்போதைய அரசியல்வாதிகள்

## ஜால்ரா அரசியல் செய்கின்றனர்

■ எஸ்.கணேசன்



மலையக கல்வி வளர்ச்சிக்காக என்னால் முடிந்த அத்தனை விடயங்களையும் வெற்றிகரமாக செய்து முடிப்பேன் என தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார், இந்த விடயத்தில் தான் உறுதியாக இருப்பதாகவும். எனவே, இலக்கை அடையும்வரை நிச்சயம் போராடுவேன் என்றார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும், முன்னாள் அமைச்சருமான அமரர் பெ.சந்திரசேகரனின் 13ஆவது சிரார்த்த தின மற்றுமொரு நிகழ்வு, தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் (1) அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

மறைந்த தலைவர் அமரர். பெரியசாமி சந்திரசேகரனுடன் 24 மணிநேரமும் இணைந்து பயணித்தவன் நான். அவரின் ஒவ்வோர் அசைவுக்கும் எனக்கு அர்த்தம் புரியும். அப்படிபட்ட ஒரு தலைவரின் ஆசியால்தான் எனது அரசியல் பயணம் நீடித்தது. அவரின் ஆசியால்தான் இன்று கல்வி இராஜாங்க அமைச்சு பதவிகூட கிட்டியது என கருதுகின்றேன்.

தற்போதைய அரசியல்வாதிகள் பதவிகளுக்காகவும், அரசாங்க தலைவரை திருப்திபடு த்துவதற்காகவும் ஆமாம் சாமி போட்டு ஜால்ரா அரசியலை முன்னெடுக்கின்றனர். ஆனால் அமரர். சந்திரசேகரனின் செயற்பாடுகள் வித்தியாசமானவை. அமைச்சரவையில் இருந்துகொண்டே அரசாங்கத்தை எதிர்த்தவர். அவசரகால சட்டத்துக்கு ஆதரவு வழங்க மறுத்தவர். அதற்கு சார்பாக ஒருநாள் கூட வாக்களித்தது கிடையாது.

பொங்குதமிழ் நிகழ்வில் பங்கேற்பதற்காக வெளிநாடு செல்வார். அவரின் உரை குறித்து இங்குள்ள புலனாய்வுதுறை கழுகுபார்வை செலுத்தும். ஆனாலும் சொல்ல வேண்டிய விடயங்களை பகிரங்கமாக சொல்லிவிடுவார். எக்காரணத்தை கொண்டும் பின்வாங்கமாட்டார். உணர்வுடன் செயற்பட்டவர் அவர். அவரின் வழிகாட்டலில் வந்த நான் இன்று கல்வி இராஜாங்க அமைச்சராக இருக்கின்றேன். கல்விதான் ஒரு சமூகத்தின் தலையெழுத்தை மாற்றும். அதனை நிச்சயம் செய்வதற்கு முயற்சிப்பேன் என்றார்.

### திகன மக்களுக்கு

## வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி- திகனை பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெரும் மக்களுக்கு புத்தாண்டுப் பரிசாக 25 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான வாழ்வதார உதவிகளை கொழும்பு 306 சீ 2 லயன்ஸ் கழகம் வழங்கியது.

குறித்த வாழ்வாதார உதவிகள் திகன - ராஜவாலுகாராம விஹாரையில் வைத்து வழங்கப்பட்டன.

இதில் 1200 ற்கும் மேற்பட்ட தென்னம் பிள்ளைகள், கர்ப்பிணிகளுக்கு பிரசவ காலத்தில் தேவைப்படும் அத்தியாவசிய பொருள்கள், வயோதிபர்களுக்கான சக்கர கதிரை, ஊன்று கோல்கள், தையல் இயந்திரம், பாடசாலை



உபகரணங்கள், உலர் உணவுப் பொருட்கள் அடங்கலாக மொத்தம் 25 இலட்ச ரூபாய்க்கும் அதிகமான பொருள்கள் வழங்கப்பட்டன.

306-சீ-2 மாவட்ட லயன்ஸ்கழகம் ஆளுநர் சிங்காதிபதி பெனார்ட் கம்லத், பிரதேச லயன்ஸ் கழகத் தலைவர் பி.என். வீரபாகு, திருமதி சாவித்திரி வீரபாகு, உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பொருட்களை கையளித்தனர்.



**சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்தனர்...**

ஹேலீஸ் கம்பனியின் கீழ் இயங்கும் நானுஓயா– சமர்செட், ஈஸ்டல் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (2) சம்பிரதாய பூர்வமாக தங்களது கொழுந்துப் பறிக்கும் தொழிலை ஆரம்பித்தனர். இதன்போது தோட்ட அதிகாரி கோசல விஜேசேகர, உதவி முகாமையாளர் ஹிருண, தலைமை வெளிக்கள உத்தியோகத்தர் வசந்த யாப்பா பண்டார ஆகியோரால் தேயிலை கொழுந்து பறிக்கப்பட்டதுடன், இதனையடுத்து தொழிலாளர்கள் தொழிலை ஆரம்பித்தனர். (பி.கேதீஸ்

### சுற்றாடல் பாதிப்பை தடுப்பதற்கான யோசனைகளுக்கு

## இதுவரை உரிய தீர்வில்லை

### சுற்றாடல் அமைப்புகள் கவலை

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாவட்டத்தில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மாத்தளையிலுள்ள சுற்றாடல் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

தமது அமைப்புகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகளுக்கு அமைய மாவட்டத்தில் உள்ள அனைத்து வனங்களையும் அரசாங்கம் பொறுப்பேற்று இருப்புப் படுத்துதல், நீர் ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கு கால்வாய்களை முறைப்படுத்தாமல் பயன்படுத்துவதை தடுத்தல், ஆழ்குழாய் கிணறுகளை முறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல், கழிவு பிரச்சினை முகாமைத்தவம் உள்ளிட்ட பல்வேறு யோசனைகள் தமது அமைப்புகளால் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த முன்மொழிவுகள் மாவட்ட சுற்றாடல் குழுவிற்கும் ஏனைய சுற்றுச்சூழல் தொடர்பான முன்மொழிவுகளுக்கும் கொடுக்கப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என சுற்றாடல் அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

## கட்டண சிகிச்சை பிரிவு ஆரம்பம்



■ எஸ். கே. குமார்

நுவரெலியா மாவட்ட பொது வைத்திசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது!

நுவரெலியா மாவட்ட பொது வைத்திசாலையில் அமைக்கப்பட்டிருந்த கட்டணம் செலுத்தும் வார்ட் ( PAYING WARD) உத்தியோக பூர்வமாக நேற்று (2) திங்கட்கிழமை நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான மகேந்திர செனிவிரட்னவினால் திறந்து வைக்ககப்பட்டது.

இவ் வைபவத்தில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை விஷேட வைத்திய நிபுணர் ரவி திஸாநாயக்க மற்றும் வைத்தியர்கள் வைத்தியசாலை அதிகாரிகள் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்துக்கொண்டனர்.

### தமிழ் மொழியைக் கற்ற

## 132 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன



■ என்.ஆராச்சி

அரச மொழிகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் தமிழ் மொழியைக் கற்று நிறைவு செய்தகேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட, தெரணியகல, ருவன்வெல்ல, புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலக அலுவலகங்களில் கடமையாற்றும் 132 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த தமிழ்மொழி கற்கை நெறி, 150 மணித்தியாலங்கள் நடத்தப்பட்டதுடன்,அதன் இறுதி நிகழ்வு தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் சந்தன அனுருத்த தலைமையில் ருவன்வெல்ல, தெரணியகல, புளத்கொஹுபிட்டிய ஆகிய பிரதேச செயலாளர்களின் பங்களிப்புடன் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது பயிற்சி நெறியை நிறைவு செய்தர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், தமிழ் மொழியைப் பிரதிபலிக்கக் கூடிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## வைத்தியரைத் தாக்கியமைக்கு எதிராக அமைதிப் போராட்டம்

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஸ்ட வைத்திய அதிகாரியும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதி செயலாளருமான பாலித ராஜபக்ஷ மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிராக, பதுளை பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் உள்ளிட்ட பணியாளர் குழாமினர் நேற்று (2) அமைதிப்போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

தன்னுயிரை நேற்று முன்தினம் (1) மாய்த்துக்கொண்ட யுவதி ஒருவர், பதுளை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளதுடன், குறித்த யுவதியை வைத்தியசாலைக்கு தாமதித்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதால் காப்பாற்ற முடியாமல் போனதாக வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இதன்போது வைத்தியசாலைக்குள் புகுந்த கும்பலொன்று அமைதியின்மையாக நடந்துக்கொண்டதுடன், தன்னை தாக்கியதாகவும்



வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் வைத்தியரால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, தாக்குதலுடன் தொடர்புடைய மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், வைத்தியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை கண்டித்தே இந்த எதிர்ப்பு போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமரர் சந்திரசேகரனின் மக்கள் பணிகள் மகத்தானவை

**செந்தில் புகழாரம்**

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் அமரர் பெ.சந்திரசேகரன் நினைவு தினம் அனுஸ்டிக்கப்படும் நிலையில், அவர் மலையக மக்களுக்கு ஆற்றிய சேவைகள் மகத்தானவை என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அமரர் பெ.சந்திரசேகரன் நினைவு தினத்தை முன்னிட்டு செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமரர் பெ.சந்திரசேகரன் தனது ஆரம்ப கால அரசியலை அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின்



பாசறையில் கற்றதுடன் இ.தொ.காவில் இருந்து மலையக மக்களுக்காக பல சேவைகளை ஆற்றிய அவர் பின்னர் மலையக மக்கள் முன்னணி என்ற கட்சியை உருவாக்கி சேவைகளை செய்தார்.

அமரர் பெ.சந்திரசேகரன் மறைந்த இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் நெருங்கிய நட்பை பேணியதுடன், அவருடன் இணைந்து மலையக மக்களுக்காக பல போராட்டங்களை செய்து வெற்றிக் கண்டவர். அவர் மலையக மக்களுக்காக ஆற்றிய பணிகள் என்றும் மகத்தான பணிகளாகும். அவரது சில முன்மாதிரியான செயல்பாடுகள் கட்சிகளுக்கு அப்பால் அனைவராலும் பாராட்டப்பட்டவை என்றும் செந்தில் தொண்டமான் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# காணிகளை சூறையாடும் ஈனச்செயலை உடனடியாக கைவிடவும்

யுத்த காலத்திலும் அதற்கு பிந்திய காலங்களிலும் ஏன் இன்றுவரையிலும் சிறுபான்மையின மக்களுக்குச் சொந்தமான காணிகளை அடாத்தாக கைப்பற்றும், அபகரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பல போராட்டங்கள் இன்னுமே வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்றன.

இனப்பிரச்சினைக்கு பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு காணப்படுமென ஜனாதிபதி அறிவித்ததன் பின்னர் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில், வடக்கு, கிழக்கில் படையினரால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் மக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல் பிரதான கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது.

படையினர் வசமிருக்கும் பொதுமக்களின் காணிகள் விடுக்கப்படுமென பேச்சுகளின் போது உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தரப்பினர் அறிவித்திருந்தாலும் அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் கூட, இதுவரையிலும் முன்னெடுக்கப்படவே இல்லை என்பதுதான் யதார்த்தமாக இருக்கிறது.

இதற்கிடையில், தங்களுக்கு சொந்தமான பூர்வீக காணிகளை விடுவிக்க வலியுறுத்தும் போராட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றுக்கிடையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லக் காணிகளையும் சூறையாடும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு, தரவை மாவீரர் துயிலும் இல்லப் பகுதியை சூறையாடும் ஈனச்செயல் நடந்து கொண்டிருக்கின்றது எனக் குற்றஞ்சாட்டிய தரவை மாவீரர் இல்ல ஏற்பாட்டுகுழு தலைவர் லவக்குமார், காணி விவகாரத்துக்கு தீர்வு கிடைக்காவிடின், ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகளை தமிழ்த் தேசிய கட்சிகள் புறக்கணிக்க வேண்டுமெனக் கோரியுள்ளார்.

சிறுபான்மையின மக்களுக்குச் சொந்தமான காணிகள், மிகவும் சூட்சுமமான முறையில் அபகரிக்கும் செயற்பாட்டை எந்தவோர் அரசாங்கமும் கைவிடவில்லை என்பது, தரவை மாவீரர் துயிலும் இல்லப் பகுதி விவகாரத்தில் இருந்து வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

தொல்பொருள் ஆராய்ச்சி என்னும் போர்வைக்குள் மறைந்துகொண்டு வடக்கில், தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளும் கிழக்கில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளமை கடந்தகால கசப்பான உண்மையாகும்.

காணிகளை அபகரிப்பது மட்டுமன்றி, பலவந்தமாக குடியேற்றங்களை முன்னெடுப்பதையும் அரசாங்கம் கச்சிதமாக முன்னெடுத்துக்கொண்டுதான் இருக்கின்றது. சிறுபான்மை இன மக்கள் செறிந்துவாழும் வடக்கு, கிழக்கில் இவ்வாறான ஈனச்செயல்கள் முன்னெடுப்படுகின்றன. இது, அங்குவாழும் சிறுபான்மையின இனப்பரம்பலை சீர்குலையச் செய்யும் செயற்பாடாகும்.

இவையெல்லாம் எதிர்காலத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தும். உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகள், பாராளுமன்றம் ஆகியவற்றுக்கான பிரதிநிதிகள் தெரிவில் கடும் பாதிப்புகள் ஏற்படும் என்பதை, சிறுபான்மையின மக்களின் பிரதிநிதிகள் கவனத்தில் கொண்டு, பூர்வீக காணிகளை கபளீகரம் செய்வதை தடுத்து நிறுத்தவும், சுவீகரிக்கப்பட்டிருக்கும் காணிகளை மீளவும் பெற்றுக்கொடுக்கவும் வழிசமைக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணிலுடன் பேச்சுவார்த்தையில் பங்கேற்றிருக்கும் தரப்பினர், காணி விவகாரத்துக்கு கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்கவே வேண்டும். ஏனெனில், 2023 பெப்ரவரி 4ஆம் திகதிக்கு இன்னும் நீண்ட நாள்கள் இல்லையென்பதை நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# சின்னத் தேர்தலும் பெரிய கேள்விகளும்

மொஹமட் பாதுஷா

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான சத்தியத்தன்மை குறித்த வாதப் பிரதிவாதங்களே, இன்று அரசியல் அரங்கை நிரப்பியுள்ளன. தேர்தல் நடந்தால், நாட்டில் நிலவும் பெரும்பாலான பிரச்சினைகள், நெருக்கடிகள் எல்லாம் முற்றாகத் தீர்ந்து விடும் என்ற அளவுக்கு அதன் முக்கியத்துவம் பெருப்பித்துக் காட்டப்படுகின்றது.

இந்தப் பின்னணியில், தேர்தலை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டத்தின்படி, வேட்புமனு தாக்கல் பூர்த்தியாகி, ஐந்து முதல் ஏழு வாரங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

எனவே, எதிர்வரும் 10ஆம் திகதிக்குள் சபைகளைக் கலைத்து, மார்ச் மாதத்தில் வாக்கெடுப்பை நடத்தப் போவதாக அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. சமகாலத்தில், உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்யும் குழுவின் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், தேர்தலை நடத்துவதற்கான போதிய நிதி அரசாங்கத்திடம் இல்லை என்ற கதைகளை ஒரு தரப்பினர் கூறத் தொடங்கியுள்ளனர். எவ்வாறிருப்பினும், அந்நிதி ஏற்கெனவே வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு விட்டதாக, தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

‘சின்னத் தேர்தல்’ என்று பேச்சுவழக்கில் அழைக்கப்படும் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு முன்னர், விடை தேட வேண்டிய முக்கியமான பல பெரிய கேள்விகள் உள்ளன.

முதலாவது கேள்வி, மாகாண சபைத் தேர்தல் பற்றியதாகும்.

நாட்டில் உள்ளூராட்சி சபைகளுக்கு முன்னரே, மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் முடிவடைந்து விட்டது. அந்தவகையில், தேர்தல் ஒழுங்குவரிசையில் நோக்கினால், இப்போது அவசரமாக நடத்தப்பட வேண்டியது மாகாண சபைகளுக்கான தேர்தல் ஆகும்.

அப்படியென்றால், இதுவரை மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு, ஏன் ஆர்வம் காட்டப்படவில்லை என்ற கேள்வி எழுகின்றது.

மாகாண சபை முறைமையை பற்றிய மீள்பரிசீலனை, 13ஆவது திருத்தம், இந்தியாவின் அழுத்தம் போன்ற இன்னோரன்ன அரசியல் காரணங்களால் மாகாண சபை தேர்தலைக் கடந்து, உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு அரசாங்கம் பாய்ந்துள்ளதாக அனுமானிக்க முடிகின்றது.

அடுத்த கேள்வி, உண்மையிலேயே ‘சின்னத் தேர்தல்’ ஒன்று நடைபெறத்தான் போகின்றதா? அல்லது அப்படியான ஒரு மாயத் தோற்றம் கட்டமைக்கப்படுகின்றதா என்பதாகும்.

பொதுவாக தேர்தல்களை நடத்த விரும்பாத ஓர் ஆட்சியாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் விமர்சிக்கப்பட்டார். இப்போது ‘மொட்டு’ ஆதரவு ஜனாதிபதியாகவே அவர் இருக்கின்றார். அவரது சொந்தக் கட்சிக்கு பாராளுமன்றத்தில் ஒரேயோர் ஆசனம் மட்டுமே இருக்கின்றது.

இந்நிலையில், எந்தத் தேர்தல் நடத்தினாலும் அதன் பெறுபேறுகள் அதற்கடுத்த தேர்தலில் செல்வாக்குச் செலுத்துவதாக இருக்கும் என்பதுதான் யதார்த்தமாகும். எனவே, இப்படியே காலத்தை இழுத்தடித்துவிட்டு, நேரடியாக பெரிய தேர்தல் ஒன்றுக்கு, அதாவது ஜனாதிபதி தேர்தலுக்குச் செல்லலாம் என்ற பேச்சும் அரசியல் வட்டாரங்களில் கசிந்துள்ளது.

ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கு தேர்தல்கள் அடிப்படையானவை என்பதில், யாருக்கும் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. உரியகாலத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதுதான் பொது விதியுமாகும்.

ஆனால், நாடும் நாட்டு மக்களும் வாழவே வழியில்லாமல் இருக்கின்ற இன்றைய காலகட்டத்தில், தேர்தல் ஒன்று அவசியமானதுதானா என்ற கோணத்தில் முன்வைக்கப்படும் கேள்வி, புறக்கணிக்கப்படக் கூடியதல்ல.

தேர்தலுக்காகவும் அதன் பின்னர் உள்ளூராட்சி சபைகளை நிர்வகிக்கவும் பெருந்தொகை நிதியைச் செலவிட வேண்டியிருக்கின்றது. பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்தின் வழிப்படுத்தலில் செயற்படுகின்ற அரசாங்கம், நாணய நிதியம் எந்த எல்லை வரை தேர்தலை நடத்த இடம்கொடுக்கும் என்பதும் ஒரு யதார்த்தமான கேள்விதான்.

ஆகவேதான், உள்ளூராட்சி தேர்தல் மிகக் கிட்டிய காலத்தில் நடைபெறுவதற்கான நிகழ்தகவுகள் மிகக் குறைவாக இருப்பதாக, அரசியல் அரங்கில் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

கசியும் தகவல்கள் இப்படியான சந்தேகங்களுக்கு வித்திட்டாலும், பொதுவெளியில் அரசாங்கம் தேர்தலை நடத்தப் போவதாகவே உறுதியாகக் கூறி வருகின்றது. அதுமட்டுமன்றி, உள்ளூராட்சி தேர்தலுக்கான தடபுடல் ஏற்பாடுகளை, தேர்தல்கள் ஆணைக்குழுவும் மேற்கொண்டு வருகின்றமை சாத்தியத்தன்மை குறித்த நம்பிக்கை ஏற்படக் காரணமாகியுள்ளது.

இதேவேளை, தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியத்தன்மை குறித்த கேள்விகளை விட, உள்ளூராட்சி மன்றங்கள், கடந்த காலங்களில் ஆற்றிய சேவையின் செயற்றிறன் அல்லது மக்களுக்கு கிடைத்த பயன் பற்றிய கேள்விகள் மிகப் பெரியவையாகும்.

நாட்டில் 341 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இவற்றில் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள், 276 பிரதேச சபைகள் உள்ளடங்குகின்றன. இவற்றில், ஒரு பிரதேச சபை தவிர்ந்த ஏனைய அனைத்துச் சபைகளின் ஆட்சிக்காலம் ஏற்கெனவே முடிவுற்று, ஒரு வருடத்தால் நீட்டிக்கப்பட்ட நிலையில் தற்போது இருக்கின்றன.

இதுவெல்லாம் சரிதான்! ஆனால், இந்த உள்ளூராட்சி மன்றங்களும் அதன் தலைவர்களும் உறுப்பினர்களும் தமது ஆட்சிக்காலத்தில் மக்களுக்கு எந்தளவுக்கு வினைத்திறனாக, ஆக்கபூர்வமாக செயற்பட்டு இருக்கின்றார்கள் என்ற கேள்வியை, இப்போது எழுப்ப வேண்டியுள்ளது.

2018இல் உள்ளூராட்சி சபை தேர்தல் நடைபெற்றதற்குப் பின்னர், நாட்டில் பல எதிர்பாராத சம்பவங்கள் இடம்பெற்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், கொரோனா அலைகள், எரிபொருள் மற்றும் பொருளாதார நெருக்கடி என இன்றுவரை இத்தகைய நெருக்கடிகள் தொடர்கின்றன.

இவையெல்லாம் வழக்கத்துக்கு மாறான, அசாதாரண சூழ்நிலைகள் என்பதை மறுக்க முடியாது. ஆனால், இக்காலத்திலும் கூட, உள்ளூராட்சி மன்றங்களுக்கு, காலம் வித்தியாசமான வாய்ப்புகளை வழங்கியது என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தத் தருணங்களில், குறிப்பாக முஸ்லிம், தமிழ் மக்கள் வாழும் பகுதிகளின் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் தமது அதிகாரங்களை எந்தளவுக்கு மக்களுக்காக பயன்படுத்தினார்கள்?

தமக்கு வாக்களித்த மக்களுக்கு சேவையாற்றும் விடயத்தில், எத்தனை புள்ளிகளை அவர்கள் பெற்றிருக்கின்றார்கள்? மீண்டும் தேர்தல் கேட்டு வருவதற்கு அவர்களுக்கு என்ன அருகதை இருக்கின்றது போன்ற கேள்விகளுக்கு, மக்கள் விடைகள் காண வேண்டும்.

இன்று ஆட்சியில் இருப்பவர்கள் மட்டுமன்றி, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற நமது எம்.பிக்களும் மக்களை மறந்து ஆடுகின்ற கூத்தை, நாம் கண்டுகொண்டுதான் இருக்கின்றோம். அதிலும் குறிப்பாக, முஸ்லிம் எம்.பிக்கள் எந்தளவுக்கு மக்கள் நலனை கணக்கிலெடுக்காமல் செயற்படுகின்றார்கள் என்பது பட்டவர்த்தனமானது.

பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகளுக்கான உறுப்பினர்களின் ‘நாற்றுமேடை’ போலவே, உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளதாக குறிப்பிடலாம். பெரும்பாலும் உள்ளூராட்சி சபையில் பதவி வகித்தவர்கள், அடுத்தடுத்த காலங்களில் மாகாண சபைக்கு, பாராளுமன்றத்துக்குப் போட்டியிடுகின்றார்கள்.

ஆகவே, உள்ளூராட்சி சபைகளுக்கு சிறந்தவர்களை மட்டும் தெரிவு செய்வதுடன், மக்களை மறந்தவர்களுக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும். எக்காரணம் கொண்டும் அவர்கள் அடுத்த கட்டமாக, மக்களை ஏமாற்றுவதற்கு இடமளிக்கக் கூடாது.

அந்தவகையில் பார்த்தால், சிங்கள மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் மக்கள் கேள்வி எழுப்புகின்ற தன்மை அதிகம் என்பதால், அச்சபைகளின் செயற்பாடுகள் ஓரளவுக்கு பரவாயில்லை எனலாம். தமிழ் மக்களின் பிரதேசங்களில் நிலைமை திருப்திப்படும் விதத்தில் இல்லை.

முஸ்லிம்கள் வாழும் பகுதிகளின் அநேக பிரதேச சபைகள், மக்கள் சார்பு அரசியலில் தோல்வி அடைந்துள்ளதாகவே தோன்றுகின்றது. கொரோனா காலத்தில் அயல் பிரதேசத்தை மறித்து கயிறு கட்டினால், ஊரைப் பாதுகாக்கலாம் எனக் கருதிய சபை தவிசாளரின் நடவடிக்கையும் ‘ஒரு பதச்சோறாக’ இந்த இடத்தில் நினைவுக்கு வந்து போகின்றது.

உண்மையில், மக்களுக்காக உயர்ந்த பட்சம் சேவையாற்றுவதற்கான வாய்ப்பை சரியாக பயன்படுத்துவதை விடுத்து, ஊரில் குப்பை அள்ளுவதையும், மின்விளக்கு பொருத்துவதையும் கூட சரிவரச் செய்ய முடியாமல் போன சபைகளும் கால நீட்டிப்பை அனுபவித்து வருகின்றன.

இந்நிலையில், ‘நீங்கள் இந்த ஆட்சிக் காலத்தில் என்ன செய்தீர்கள்’ என்று ஒரு முன்னேற்ற அறிக்கையை சபை தலைவரிடம், உறுப்பினர்களிடம் கேட்டால், சமர்ப்பிப்பதற்கு அவர்களிடம் உருப்படியாக எதுவும் இருக்காது என்பதே கசப்பான உண்மையாகும்.

ஆனால், முஸ்லிம்கள் வாழும் பல சபைகளின் தவிசாளர்களின் உறுப்பினர்களின், மாகாண சபை உறுப்பினர், எம்.பி கனவுக்கு மட்டும் பஞ்சமில்லை. இந்த இலட்சணத்தில்தான் இப்போது உள்ளூராட்சி சபை தேர்தல் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம்.

உள்ளூராட்சி சபையில் மட்டுமன்றி, மாகாண சபையிலும் பாராளுமன்றத்திலும் அங்கம் வகிக்கின்ற அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் பற்றி, மக்கள் தமக்குள் எழும் கேள்விகளுக்கு விடை காணாமல் தொடர்ச்சியாக வெறுமனே வாக்களிக்கும் இயந்திரங்கள் போல இருக்கும் காலம் வரைக்கும், இந்தத் தலைவிதி மாறப் போவதில்லை.



## வாழ்வியல் தரிசனம்

“என்னால் முடியாது” எனச் சொல்பவர்கள், மற்றையவர்கள் இலகுவாகச் செய்வதை, உங்களால் முடியாது எனச் சொல்வதே வெட்கப்பட வேண்டியது ஆகும்.

கருமம் ஆற்ற முன்னர், அதை முடிக்க முடியாது என எண்ண வேண்டாம். கட்டாயம் முடிக்கலாம் என எண்ணினால் என்ன? சோம்பேறிகளுடன் பழகினால், மற்றயவர்களும் சோம்பேறிகளாகி விடுவார்கள். மனத் தளர்ச்சிகூட, தாழ்வுமனப்பான்மையின் ஒரு நிலையாகும். நோயாளிகள் கூட, தங்களைப் பற்றி அச்சப்படக்கூடாது. நம்பிக்கையே மிகச்சிறந்த பலமாகும். நோயாளர்களில் அக்கறை செலுத்துபவர்கள், அவர்களைப் பயப்படுத்தலாகாது.

சின்னப் பிள்ளைகளைப் பாருங்கள்! தாங்கள் தான் எந்தக் காரியத்தையும் செய்யவேண்டும் என அடம்பிடிப்பார்கள். அவர்களுக்கு இருக்கும் தன்னம்பிக்கை, வயது வந்தவர்களுக்கு இருப்பதில்லை.

அச்சப்பட்டால் காரியம் ஆகாது. முன்னைய காலத்தில் நம்முன்னோர்கள், பல மைல் தூரம் நடந்துசென்று வருவார்கள். சொகுசான வாழ்க்கையை மனிதர் விரும்பினால், சோம்பேறித்தனமும் கூடவரும்.

பக்கத்து வீட்டுக்குப் போகக்கூட மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்துகின்றார்கள். கஷ்டப்பட்டால்த்தான் இஷ்டப்பட்ட நல்லதைச் செய்யலாம்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்தில்

### சுற்றுச்சூழலுக்கு பாரிய அச்சுறுத்தல்



மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்துக்குப் பின்புறமாக இருக்கும் வாவியோரமாக குப்பைகள் போடப்படுவதால், வாவி அசுத்தமடைவதுடன் துர்நாற்றமும் வீச ஆரம்பித்துள்ளது.

நாளாந்தம் சேரும் குப்பைகளுடன், வெற்று சாராயப் போத்தல்கள் மற்றும் வெற்று பியர் டின்கள் என்பனவும் காணப்படுகின்றன.

இவற்றுக்குள் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்களும் காணப்படுவதால், டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய ஆபத்துகளும் ஏற்படலாம் என்ற அச்சமும் பிரயாணிகள் மத்தியில் அதிகரித்துள்ளது.

ஒரு நகரத்தை சுத்தமாகவும் நோய் பரவாத வகையிலும் அழகாகவும் பேணவேண்டிய பொறுப்பு, அந்த நகரத்தை ஆட்சிசெய்யும் உள்ளூராட்சி அமைப்பையே சாரும். அந்தவகையில், மட்டக்களப்பு மாநகர சபையின் எல்லைக்குள் அமையும் மட்டக்களப்பு பிரதான பஸ்தரிப்பு நிலையமும் குறித்த வாவியும் தொடர்பாக, மாநகர சபையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பயணிகள் கேட்டுள்ளனர்.

அதேவேளை, பயணிகள் உட்பட குறித்த வாவியில் குப்பைகளை வீசுவோரும், சுற்றுச்சூழல் மற்றும் பொதுசன அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அஸ்ஹர் இப்றாஹிம்

ஹரியானா

# பாலியல் குற்றச்சாட்டு; பதவியை இராஜினாமா செய்த அமைச்சர்

பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஹரியானா விளையாட்டுத்துறை அமைச்சர் 'சந்தீப் சிங் 'தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந்திய ஹொக்கி அணியின் தலைவராக செயற்பட்டு, பின்னர் அரசியலுக்குள் நுழைந்த சந்தீப்சிங் மீது அண்மையில் தடகள பெண் பயிற்சியாளர் ஒருவர் பாலியல் புகார் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து இச்சம்பவம் தொடர்பில் முறையான விசாரணையை முன்னெடுக்குமாறு கூறி, சிறப்பு விசாரணைக் குழுவொன்றை அமைத்து ஹரியானா முதலமைச்சர் மனோகர் லால் கட்டார், உத்தரவிட்டார்.

இந்நிலையில் தன் மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதால் சந்தீப் சிங் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

அதே சமயம் தனது நற்பெயரைக் களங்கப்படுத்துவதற்காகவே இப்புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் சந்தீப்சிங் தன்னிலை விளக்கம் அளித்துள்ளார்



மராட்டியம்

## ஐவரின் உயிரை பறித்த பட்டாசு



மராட்டிய மாநிலம், சோலாப்பூர் மாவட்டம், பார்சி தாலுகாவில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலையொன்றில், நேற்று முன்தினம்(31) எதிர்பாராத விதமாக தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

குறித்த தொழிற்சாலையின் பட்டாசு தயாரிக்கும் பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தால், அக்கட்டிடம் முழுவதும் மிகுந்த சேதத்துக்குள்ளானது.


இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு படையினர் பற்றியெரிந்த தீயை அணைத்து, இடிபாடுகளுக்குள் சிக்கி இருந்தவர்களை மீட்டனர்.

இவ்விபத்தில் ஐவர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர் எனவும், 25 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா

## மத நிகழ்வில் விருந்து

### 100க்கும் மேற்பட்டோருக்கு உடல்நலம் பாதிப்பு



கேரளாவில் ஞானஸ்நான நிகழ்வில் கலந்துகொண்டு உணவருந்திய 100க்கும் மேற்பட்டோருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கேரளாவின் பத்தனம்திட்டா மாவட்டத்தில் உள்ள கீழ்வாய்பூர் பகுதியில் கடந்த 29ஆம் திகதி ஞானஸ்நான நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ள நிலையில் அதனை உட்கொண்ட 100க்கும் மேற்பட்டோர், உடல் நலம் பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இது குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறித்த நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு பழுதடைந்த உணவு வழங்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அந்நிகழ்வுக்கு உணவு விநியோகம் செய்த உணவகத்தின் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தெலுங்கானா

## லொறியிலிருந்து விழுந்த கற்கள்; மூவர் உயிரிழப்பு




தெலுங்கானா மாநிலம், மகபூபாபாத் நகரத்திற்கு அருகே நேற்று முன்தினம்(31) நள்ளிரவு, 8 பேர் ஒரு முச்சக்கர வண்டியில் பயணித்துள்ளனர்.

இதன்போது அவர்கள் பயணித்த முச்சக்கர வண்டியை, கிரனைட் கற்களை ஏற்றிச் சென்ற லொறியொன்று முந்திச் செல்ல முயன்றுள்ளது.

இதன்போது எதிர்பாராத விதமாக சில கிரனைட் கற்கள் சரிந்து குறித்த முச்சக்கர வண்டியின் மீது விழுந்துள்ளது.

இவ்விபத்தில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும், 5 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுவை


## மரணித்த காதலியால் உயிரை மாய்த்த இளைஞன்

புதுவை தேங்காய்த்திட்டு, வைகை வீதியை சேர்ந்தவர் 'ராமகிருஷ்ண சாய்'. 19 வயதான கல்லூரி மாணவனான சாய், அதே பகுதியைச் சேர்ந்த தன்னைவிட 3 வயது மூத்தவரான அஞ்சலி என்ற பெண்ணைக் காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில் இவர்களது காதல் விவகாரம் குறித்து அறிந்த அஞ்சலியின் பெற்றோர், சாயை தனது மகளிடமிருந்து விலகி இருக்குமாறு கூறி கண்டித்துள்ளனர்.

இதனையடுத்து பல முறை அஞ்சலி தொலைபேசியின் மூலம் சாயைத் தொடர்பு கொண்ட போதும், சாய் அஞ்சலியின் அழைப்பை ஏற்க மறுத்துள்ளார்.

இதனால் விரக்தியடைந்த அஞ்சலி, கடந்த மாதம்



தூக்கிட்டு தன் உயிரை மாய்துள்ளார்.

இந்நிலையில் "தனது காதலியின் மரணத்திற்கு தானே காரணமாகி விட்டதாக எண்ணி, குற்ற உணர்ச்சியில் சாய் தவித்து வந்துள்ளார்.

இதனால் சாயை அவரது பெற்றோர் சிறிது காலம் அவரது பாட்டியின் வீட்டில் இருக்குமாறு அனுப்பி வைத்துள்ளனர்.

இருந்தபோதிலும் காதலியை மறக்க முடியாமல் தவித்த அவர் வீட்டில் யாரும் இல்லாத வேளை தூக்கிட்டுத் தன் உயிரை மாய்த்துள்ளார்.

# டெலிவரி போயாக மாறிய ஸொமாட்டோ சி.இ.ஓ


ஸொமாட்டோ (Zomato) இணை நிறுவனரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான ' தீபிந்தர் கோயல்' புத்தாண்டு தினத்தன்று, உணவு விநியோகம் செய்யும் பையனான( DeliveryBoy )மாறிய சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் காரணமாக, ஸொமாட்டோவில் உணவு ஓர்டர் செய்பவர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்ததை அடுத்து, உணவு டெலிவரி செய்பவர்களுக்கு கடும் வேலைப் பளு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.


இதனால் இந்நெருக்கடியைத் தவிர்க்க தலைமை நிர்வாக அதிகாரி தீபிந்தர் டெலிவரி போயாக மாறி களத்தில் இறங்கினார்.

அவருக்கு 'ஸொமாட்டோ அலுவலகத்தில் இருந்தே முதல் ஓர்டர் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை அவர் தனது ட்விட்டரில் பகிர்ந்துள்ளார்.

அத்துடன் "புத்தாண்டு அன்று ஸொமாட்டோ பெற்ற ஓர்டர்களின் அளவு, கடந்த மூன்று ஆண்டு புத்தாண்டு நாட்களில் பெற்ற ஆர்டர்களின் எண்ணிகைக்குச் சமமாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# அத்வானிக்கு கல்யாணமா?



நடிகை கியாரா அத்வானிக்கு பிரபல நடிகருடன் விரைவில் திருமணம் நடைபெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரபல பாலிவுட் நடிகை கியாரா அத்வானி. 2014ஆம் ஆண்டு வெளியான ஃபக்ளி என்ற படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமான கியாரா அத்வானி சுஷாந்த் சிங் ராஜ்புத்தின் எம்எஸ் தோனி தி அன்டோல்டு ஸ்டோரி படத்தின் மூலம் பெரும் பிரபலமானார். தொடர்ந்து தெலுங்கு படங்களிலும் என்ட்ரி கொடுத்த கியாரா அத்வானி, இந்தி தெலுங்கு என கலக்கி வருகிறார். சித்தார்த் மல்ஹோத்ராவும் கியாரா அத்வானியும் மோதிரம் நிச்சயதார்த்தம் செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது. வரும் பெப்ரவரி 6ஆம் திகதி ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சல்மாரில் உள்ள பிரபல அரண்மனையில் திருமணம் நடைபெறவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.




## விக்னேஷ் சிவன் கண்ணீர்

தன் செல்ல மகன்களை நயன்தாரா தூக்கி வைத்திருக்கும் புகைப்படங்களை சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளார் இயக்குநர்.

தன் செல்ல மகன்களுடன் நயன்தாரா இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு விக்னேஷ் சிவன் கூறியிருப்பதாவது, இரட்டை மகன்களை பார்க்கும்போது எல்லாம் என் கண்கள் கலங்குகின்றன. ஒவ்வொரு முறையும் அவர்களின் அருகில் செல்லும்போது என் உதடுகளுக்கு முன்பு கண்ணீர் தான் அவர்களை தொடுகிறது. ஆசிர்வதிக்கப்பட்டுள்ளேன். நன்றி கடவுளே என தெரிவித்துள்ளார்.


## அதிரடி ஆக்‌ஷனில்

திரையுலகில் வளர்ந்து வரும் கதாநாயகிகளில் குறிப்பிடத்தக்கவர் சாக்ஷி அகர்வால். பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் புகழ்பெற்றவர், தற்போது 'நான் கடவுள் இல்லை 'என்கிற படத்தில் சிபிசிஐடி அதிகாரியாக நடித்துக் கொண்டிருக்கிறார். சமீபத்தில் சாக்ஷி அகர்வால் நடித்த ஒரு சண்டைக்காட்சி வடபழனியில் உள்ள ஒரு உடற்பயிற்சி கூடத்தில் அதாவது ஜிம்மில் நடந்தது. சண்டைக் காட்சியை




ஸ்டண்ட் மாஸ்டர் கனல் கண்ணன் வடிவமைத்து இயக்கினார்.அதில் சாக்ஷி அகர்வால் டூப் போடாமல் பல ரிஸ்க்கான காட்சிகளில் நடித்ததைப் பார்த்து கனல் கண்ணன் பாராட்டி உள்ளார்.

## ஸ்ருதி ஹாசன் மகிழ்ச்சி



நடிகை ஸ்ருதி ஹாசன் தெலுங்கில் பாலகிருஷ்ணாவுடன் நடித்துள்ள 'வீரசிம்ஹா ரெட்டி', சிரஞ்சீவியுடன் நடித்துள்ள 'வால்டர் வீரய்யா' படங்கள் பொங்கலுக்கு வெளியாகின்றன. ஒரே நேரத்தில் அவர் நடித்து 2 படங்கள் வெளியாவதால் மகிழ்ச்சியாக இருக்கிறார், ஸ்ருதி ஹாசன். இதுபற்றி அவர் கூறியதாவது:

நான் நடித்த 2 படங்கள் பொங்கலுக்கு வெளியாக இருப்பதால் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருக்கிறேன். இதன் படப்பிடிப்புக்காக வெளிநாடு சென்று வந்தது சிறப்பாக இருந்தது. 'தி ஐ' என்ற ஆங்கில பட ஷூட்டிங்கிற்காக, கிரீஸ் நாட்டுக்கு 2 மாதம் சென்று வந்தேன். ஒரே ஷெட்யூலில் மொத்த படமும் முடிந்துவிட்டது.



## புகுந்து விளையாடுறாரே

இயக்குநர் வெற்றிமாறன் இயக்கத்தில் வெளியான பொல்லாதவன், ஆடுகளம், வடசென்னை உள்ளிட்ட பல படங்களில் மிரட்டல் நடிப்பை வெளிப்படுத்திய நடிகர் கிஷோர் கடந்த ஆண்டு ஏகப்பட்ட பெரிய திரைப்படங்களிலும் வெப்சீரிஸ்களிலும் நடித்து அசத்தி உள்ளார்.

2022ல் மட்டும் ஆச்சார்யா, சேகர், டைரி, டிராமா, காந்தாரா, பொன்னியின் செல்வன், மஞ்ச குருவி உள்ளிட்ட படங்களிலும் ஷீ, பேட்டைக்காளி உள்ளிட்ட வெப்சீரிஸ்களிலும் இவர் நடித்துள்ளார்.

தமிழ், தெலுங்கில் மட்டுமின்றி கடந்த ஆண்டு இந்தி வெப்சீரிஸிலும் கிஷோர் சும்மா புகுந்து விளையாடி உள்ளார். நெட்பிளிக்ஸில் வெளியான She வெப்சீரிஸில் நாயக் எனும் கதாபாத்திரத்தில் போதை பொருள் கடத்தல் செய்யும் மாஃபியா கூட்டத்தின் தலைவனாக நடித்திருப்பார். இவரை பிடிக்க அந்த வெப்சீரிஸின் நாயகி அதிதி போஹன்கர் பாலியல் தொழில் செய்யும் பெண்ணாக வந்து இவர் மீது காதல் வயப்படும் கட்டிலறை காட்சிகள் ரசிகர்களை ஷாக் ஆக்கின.

# நடிப்புக்கு முழுக்கு

தமிழில் ரஜினிகாந்த் ஜோடியாக கபாலி, கார்த்தி ஜோடியாக ஆல் இன் ஆல் அழகுராஜா படங்களில் நடித்து இந்தியில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் ராதிகா ஆப்தேவும் படம் இயக்க போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

கதாநாயகிகளாக சினிமாத்துறைக்குள் வரும் கதாநாயகிகள் இயக்குநர் அவதாரம் எடுப்பது சகஜமாகி வருகிறது. அந்த வகையில் பல கதாநாயகிகள்படம் டைரக்டு செய்துக்கொண்டிருக்கின்றனர். ரேவதி, கங்கனா ரணாவத், நந்திதா தாஸ், ஹேமமாலினி, பூஜா பட் உள்ளிட்ட நடிகைகள் டைரக்டர்களாக மாறி உள்ளனர் நாம் அறிந்ததே.

ஒரு காலத்தில் இயக்குனர் என்றால் ஆண்கள்தான் என்ற நினைப்புதான் நமக்கு இருக்கும்.



ஆனால் இப்போது பல பெண் இயக்குனர்கள் சினிமாவில் வலம் வருகின்றனர். அதே போல் படம் நடிக்கும் நடிகை, நடிகர்கள் இப்போது இயக்குனர்களாகவும் தங்களை தயார்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழில் ரஜினிகாந்த் ஜோடியாக கபாலி, கார்த்தி ஜோடியாக ஆல் இன் ஆல் அழகுராஜா படங்களில் நடித்து இந்தியில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் ராதிகா ஆப்தேவும் படம் இயக்க போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதற்காக நடிப்பதை அவர் நிறுத்த போவதாகவும் கூறப்படுகிறது. இதுகுறித்து ராதிகா ஆப்தே அளித்துள்ள பேட்டியில், இயக்குனராக வேண்டும் என முதலில் இருந்தே எனக்கு ஆசை உள்ளது. ஆனால் எதிர்பாராமல் நடிகையாகி விட்டேன். அது மட்டுமின்றி நான் ஏற்கனவே இயக்குனர் பிரிவில் பயிற்சியும் பெற்றிருக்கிறேன். விரைவில் ஒரு படத்தை இயக்க போகிறேன். என்றார்.




இருபதுக்கு T-20 தொடர் இன்று ஆரம்பிக்கிறது:

# இந்தியாவை வீழ்த்துமா இலங்கை?

இந்திய, இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு T- 20 சர்வதேசப் போட்டித் தொடரானது, மும்பையில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

இந்திய அணியில் காயம் காரணமாக அணித்தலைவர் றோஹித் ஷர்மாவும், ஓய்வால் லோகேஷ் ராகுல், விராட் கோலி இல்லாத நிலையில், ராகுல் ட்ரிபாதி, ருத்துராஜ் கைகவாட், இஷன் கிஷன், ஷுப்மன் கில் உள்ளிட்ட வீரர்கள் தம்மை நிரூபிப்பதற்கான வாய்ப்பாக இத்தொடர் காணப்படுகின்றது.

இதேவேளை, ஜஸ்பிரிட் பும்ரா, புவ்னேஷ்வர் குமார், மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ் இல்லாத நிலையில், முகேஷ் குமார், ஷிவம் மவி உள்ளிட்டோரை அணி நிர்வாகம் சோதிக்கும் எனத் தெரிகிறது.

மறுபக்கமாக அணித்தலைவர் தசுன் ஷானக, வனிடு ஹஸரங்க போன்றோருடன் லங்கா பிறீமியர் லீக்கில் பெறுபேறுகளை வெளிப்படுத்திய அவிஷ்க பெர்ணாண்டோ, சதீர சமரவிக்கிரம, அஷேன் பண்டாரவுடன் பலமாகவே இலங்கை காட்சியளிக்கிறது.

பானுக ராஜபக்ஷ போன்றோர் தொடர்ந்து அணியில் இடம்பெறுவதற்கு தொடர்ந்து ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் செல்சி நொட்டிங்ஹாம் பொரெஸ்ட்

### அஸ்டன் வில்லாவிடம் தோற்ற டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நொட்டிங்ஹாம் பொரெஸ்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியிருந்தது.

செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை ரஹீம் ஸ்டேர்லிங்க் பெற்றதோடு, பொரெஸ்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை சேரஜ் ஒரியே பெற்றிருந்தார்.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற அஸ்டன் வில்லாவுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது.




பிரெஞ்சு லீக் 1 தொடர்:

## தோற்ற நடப்புச் சம்பியன்கள்

பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில், லென்ஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பரிஸ் ஸா ஜேர்மைன் தோற்றது.

இப்போட்டியில் பரிஸ் ஸா ஜேர்மைனின் நட்சத்திர முன்களவீரர்களான நெய்மர், லியனல் மெஸ்ஸி ஆகியோர் முறையே கடந்த

**உலகக் கிண்ணத்திலிருந்து மீண்டும் வருகின்றமை காரணமாக பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது**

போட்டியில் சிவப்பு அட்டை காட்டப் பெற்றமை, உலகக் கிண்ணத்திலிருந்து மீண்டும் வருகின்றமை காரணமாக பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசியக் கிண்ணத்துக்கு தேசிய அணிக்கு செல்ல முடியாமல் போனதற்கு

## றொட்றிகோ, சிறு குழுவின் சதியே காரணம்: ஜஸ்வர் உமர்

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் பங்கேற்க முடியாமல் போனதற்கு றொட்றிகோ மற்றும் ஒரு சிலரின் சதியே காரணம் என கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமர் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த உமர், "இந்த சதித்திட்டத்தின் பின்ன ணியில் இம்மு றை தேர்தலில் போட்டியிடும் ஒரு அரசியல்வாதி இருப்பதாகவும், தனது மகன் இந்த அணியில் இடம்பெிடிக்காததால், றொட்றிகோவுடன் இணைந்து இந்த சதியை செய்துள்ளனர். சர்வதேச தடை ஒன்று விதிக்கப்பட்டால் அற்கான பொறுப்பை முதலில் ரஞ்சித் றொட்றிகோ தான் ஏற்க வேண்டும்.

வரலாற்றில் முதற் தடவையாக 17 வயதுக்குட்பட்ட தெற்காசியத் தொடரை இலங்கையில் நடத்த என்னால் முடிந்தது. அந்த சிறப்பான தொடரை நடத்தியதை பெற்றோர்கள் மற்றும் விளையாட்டு இரசிகர்கள் பாராட்டினர். இதைத் தாங்க முடியாதவர்கள் சிலர் இருந்தனர்.

அவர்கள், விளையாட்டுத்துறை அமைச்சரை ஏமாற்றும் வகையில் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி இலங்கை கால்பந்தாட்டத்துக்கு இடைக்கால நிர்வாகக் குழுவை நியமிக்க முயன்றனர்.

17 வயதுக்குட்பட்ட தேசிய அணி சிறப்பாக தயாராகி இருந்ததோடு, ஆசியக் கிண்ணத்தில் பங்குபற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது" எனக் கூறினார்.

சீனா

# வைத்தியசாலையில் குவியும் சடலங்கள்

சீனாவில் கொரோனாத் தொற்றுப் பரவலானது மீண்டும் தீவிரமடைந்து வருகின்றது.

குறிப்பாக அந்நாட்டில் ஒமைக்ரோனின் `BF.7` துணை வைரஸ்களின் பரவலானது நாளுக்கு நாள் வெகுவான அதிகரித்து வருவதால் அங்கு உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதன் காரணமாக சீனாவின் பல பகுதிகளிலும் கடுமையான ஊரடங்குக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் மருத்துவமனைகளில் சடலங்கள் குவிந்துள்ள வீடியோ காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



அதிகளவில் முதியோர் உயிரிழப்பதால் தினசரி 9,000 பேர் வரை உயிரிழப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரேஸில்

## மீண்டும் லூலா டா

பிரேஸிலின் புதிய ஜனாதிபதியாக `லுலா டா சில்வா ` நேற்று முன்தினம் (01) பதவியேற்றார்.

பிரேஸிலில் கடந்த ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், முன்னால் ஜனாதிபதி ஜெயீர் போல்சனரோவுக்கும், முன்னாள் ஜனாதிபதியும் இடதுசாரி வேட்பாளருமான லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவுக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவியது.

இந்நிலையில் இத்தேர்தலில் 50.90 சதவீத வாக்குகள் பெற்று லுலா டா சில்வா மீண்டும் பிரேஸில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கொரோனாத் தொற்றைக் கையாண்ட முறை, அமேசான் மழைக்காடுகள் அழிப்பு உள்ளிட்ட விவகாரங்களில் ஜெயீர் போல்சனரோ வின் நடவடிக்கைகள் அந்நாட்டு மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் பிரேசிலின் புதிய ஜனாதிபதியா லுலா டா சில்வா பதவியேற்றார்.



பிரேஸில்

## பீலேவின் உடல் நல்லடக்கம்

உலகக் காற்பந்தாட்டத்தின் 'கறுப்பு முத்து' என அழைக்கப்படும் பிரேஸிலின் காற்பந்து ஜாம்பவான் 'பீலே' உடல் நலக் குறைவு காரணமாக தனது 82 ஆவது வயதில், கடந்த 29 ஆம் திகதி உயிரிழந்தார்.

பீலேவின் மறைவானது உலக காற்பந்து ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பிரேசிலில் கடந்த 1940ஆம் ஆண்டு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த பீலே மிகுந்த போராட்டத்துக்கு மத்தியில் கடந்த 1958ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக்கோப்பை தொடரில் சிறப்பாக விளையாடி பிரேஸில் அணியை முதன் முறையாக வெற்றிக் கனியை சுவைக்க வைத்தார் . அதே சமயம் காற்பந்து வரலாற்றில் அதிக முறை ஹாட்ரிக் கோல் அடித்த பீலே, 3 உலகக் கோப்பைகளை பிரேஸிலின் வசமாக்கியவர் ஆவார்.

அந்தவகையில் காற்பந்து உலகில் கொடிகட்டி பறந்த அவர் தனது வாழ்நாளில் பிரேசிலுக்காக 95 போட்டிகளில் விளையாடி77 கோல்களை அடித்துள்ளார் என்பதும் கிளப் அணிகள் உட்பட முதல்தர கால்பந்து போட்டிகளில் சுமார் 1,282 கோல்கள் அடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பீலேவின் இறுதிச் சடங்கானது பல்லாயிரக்கணக்கான ரசிகர்களுக்கு மத்தியில் இன்று(03) நடைபெறும் எனவும் , இதில் பிரேஸின் புதிய ஜனாதிபதி `லுலா டா சில்வா பங்கேற்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


கனடா

## கனடாவில் சொத்து வாங்கத் தடை

கனடாவில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் சொத்து வாங்குவதற்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

அந்நாட்டில் வீடுகளின் மதிப்பு உயர்வடைந்துள்ளதால் இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.


எனினும் கனடாவில் குடியேறியவர்கள் மற்றும்



நிரந்தரமாக குடியிருந்து வரும் வெளிநாட்டவர்களுக்கு இத்தடை பொருந்தாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மெக்சிகோ

## சிறைச்சாலை மீது தாக்குதல்: 14 பேர் உயிரிழப்பு



மெக்சிகோவின் ஜூவாரஸ் நகரிலுள்ள சிறைச்சாலை மீது போதைப்பொருள் கடத்தல் கும்பலொன்று நடத்திய கண்மூடித்தனமானத் தாக்குதலில், பாதுகாப்பு படையைச் சேர்ந்த 10 பேர் வீரமரணம் அடைந்தனர்.

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம்(01) காலை 7 மணியளவில் துப்பாக்கிகள் உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்களுடன் கறுப்பு உடையில் சிறைச்சாலைக்கு வந்த 14 பேர் கொண்ட கும்பலொன்றே இத்தாக்குதலை நடத்தியுள்ளது.

இக் கொடூரத் தாக்குதலில் பாதுகாப்பு படையினர் 10 பேரும், கைதிகள் 4 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில் இதனைச் சாதகமாகிக்கொண்டு அங்கிருந்து தப்பியோடிய 24 கைதிகளைத் தேடும் பணிகள் தீவிரப்படு த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்போடியா

## பற்றியெரிந்த சூதாட்ட விடுதி: 19 பேர் உயிரிழப்பு



கம்போடியாவில் சூதாட்ட விடுதியொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19 ஆக அதிகரித்துள்ளது.

கம்போடியாவின் பாய்பட் நகரிலுள்ள சூதாட்ட விடுதியொன்றில் கடந்த 30 ஆம் திகதி நள்ளிரவு, திடீரென பாரிய தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து , சுமார் 300 பொலிஸார் மீட்புப்பணியில் ஈடுபட்ட நிலையில், காயமடைந்த 70 பேர் மீட்கப்பட்டு

**பலரது நிலமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது**

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் இவ்விபத்தில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், பலரது நிலமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை 03 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.